பக்கங்கள்: 20

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 11 ஞாயிற்றுக்கிழமை 27.11.2022 கதிர் 22

### இது ரகசியம் அல்ல!

மாகாண நியதிச் சட்டத்தை மாகாண ஆளுநரே தம்பாட்டில் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தியமை மூத்த நிர்வாக சேவை அதிகாரிகள் பலரையும் வியப்பில் ஆழ்த்தி இருக்கின்றது. இது எப்படிச் சாத்தியம்? வர்த்தமானியில் பிரசுரமாகும் வரை 2





# இன்று மாவீரர்கள் நினைவு நாள் துயிலும் இல்லங்கள் பேரெழுச்சி

## விண்ணதிர ஒலிக்கின்றன நினைவுப் பாடல்கள் மாலை 6.05 மணிக்குச் சுவாலை விடும் சுடர்கள்

**தமிழர் தாயகத்தில் உள்ள துயிலும் இல்லங்களில் இன்று மாலை நடைபெறவுள்ள மாவீரர் நாளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.**

**மாவீரர்களை நினைவேந்த அனைத்து துயிலும் இல்லங்களிலும் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் இணைந்து உணர்வுபூர்வமாக ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.** 2

## வாலுடன் பிறந்த குழந்தை



மெக்சிகோவில் முழுமையான வாலுடன் அபூர்வ பெண் குழந்தை ஒன்று பிறந்த சம்பவம் பரபாப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு மில்லியனில் ஒரு குழந்தைதான் இப்படி முழுமையான வாலுடன் பிறக்குமாம்.

அதாவது உடலிலிருந்து வால் போன்ற ஒரு சிறிய வளர்ச்சியுடன் 19

## ஆளுநரின் அரசமைப்பு அத்துமீறல்; அவைத் தலைவர் சீ.வி.கே. வழக்கு!

### சுமந்திரன் முன்னிலையாகி வாதாடுவார்



யாழ்ப்பாணம், நவம்பர் 27

வடக்கு மாகாண சபையின் நியதி சட்டங்களை, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தம்பாட்டில் பிரகடனப் படுத்தி, வர்த்தமானியில் அறிவித்திருக்கின்றமை அரசமைப்பு அத்துமீறல் என்று விமர்சித்துள்ள வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி. கே. சிவஞானம் அது தொடர்பில் ஜனாதிபதிக்கும், 2



## அருகில் உள்ள துயிலும் இல்லங்களுக்கு அனைவரும் நினைவேந்தச் செல்லுங்கள்!

### யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் கோரிக்கை

இன்றைய மாவீரர் நாளில் அனைத்துப் பொதுமக்களும் தங்கள் இல்லங்களுக்கு அருகாமையிலுள்ள துயிலும் இல்லங்களுக்கும் நினைவேந்தல் இடங்களுக்கும் சென்று நினைவேந்தல் நிகழ்வை மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஒத்துழைக்குமாறு யாழ் மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்று மதியத்துக்கு பின்னர் வடக்கு கிழக்கு தாயகம் எங்கும் இருக்கக்கூடிய கடைகள், 19





## உடுத்துறையில் நினைவேந்தல்

மாவீரர் நாள் நினைவேந்தலும், மாவீர்ர்களின் பெற்றோர் கௌரவிப்பும் யாழ், வடமராட்சி, உடுத்துறையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. 19

## கப் வாகனம் சிக்கியது

பளை - முகமாலை பகுதியில் வைத்து 29 கிலோ 150 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி 19

## சமஷ்டி எனக் கூறி ஒற்றையாட்சிக்குள் முடக்கும் முயற்சியே நடக்கிறது என்கிறார் கஜேந்திரகுமார்



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.27

தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்திற்கு தனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சமஷ்டி எனக் கூறி ஒற்றையாட்சிக்குள் முடக்கும் தீர்வை வலியுறுத்தும் தரப்புகளை தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும் என தெரிவித்தார்.

சமகால நிலைமை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தரப்புகள் எவ்வாறு சிங்கள மக்களாலேயே விரட்டியடிக்கப்பட்டார்களோ அதேபோன்று தமிழ் மக்களின் ஆணையை பெற்றுவிட்டு அதற்கு 19

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த விடயம் எப்படி நகர்ந்தது என்று அவர்கள் மூக்கில் விரலை வைக்கின்றார்கள்.

நாளை அமைச்சரவை கூட்டத்தில் இந்த விடயத்தை 'பிற விடயங்கள்' என்ற தலைப்பின் கீழ் ஜனாதிபதியினதும் ஏனைய முக்கிய அமைச்சர்களினதும் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு அமைச்சர் டகளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்கிறார் என ஒரு தகவல் வட்டாரம் தெரிவித்தது.

இன்னொரு தமிழ் கட்சியின் தலைவரும்பெரும்பாலும்நாளைஇவ்விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு நேரில் கொண்டு வந்து, இந்த நடவடிக்கையின் பாரதூரமான தன்மையை விளங்கப் படுத்துவார் என்றும் தெரிகின்றது.

ஜனாதிபதி ஆளுநருக்கு கையளித்த இந்த அதிகாரம், ஆளுநரினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டாலும், அது ஜனாதிபதியின் பெயரில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பதை தமிழ்க் கட்சித் தரப்பு ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டும் என்று தெரிகிறது

எது, எப்படி என்றாலும் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு இது கெடுகாலம் போலும்!

***

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் இணைப்புக் குழு கூட்டம் நேற்று காலை 11 மணி முதல் 2 மணி நேரம் சம்பந்தரின் இல்லத்தில் நடைபெற்றது. உப்புச்சப்பற்றக் கூட்டம் என்று தெரிகிறது. சில முடிவுகள் எட்டப்பட்டன.

* நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கும் ஒரு தடவை ஆரம்பமாகும் போதும், அதற்கு முதல் நாள் மாலையில் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் நாடாளுமன்ற குழு தவறாது கூடும்.

* கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தை ஒவ்வொரு மாதமும் தவறாது சம்பந்தனின் வீட்டில் கூட்ட வேண்டும். தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜா கொழும்பில் நிற்கின்ற திதிகளைப் பார்த்து இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்வது.

கூட்டமைப்பையோ, பங்காளி கட்சிகளையோ, அவற்றின் பிரமுகர்களையோ மற்றைய கட்சி தலைவர்களும், பிரமுகர்களும் பகிரங்க மேடைகளிலோ, கூட்டங்களிலோ, சமூக ஊடகங்களிலோ தாக்கி அறிக்கை விடுவதைக் கட்டாயமாகத் தவிர்த்துக் கொள்வது.

- இவை நேற்றைய கூட்ட முடிவுகள். நல்ல விடயங்கள்தான். ஆனால் செயலில் நடக்கும் விவகாரமாக எனக்குப் படவில்லை. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

- மின்னல் -

## ஆளுநரின் அரசமைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொது நிர்வாக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருக்கும் எழுத்து மூலம் முறைப்பாடு செய்யும் அதே நேரம், ஆளுநரின் வர்த்தமானிப் பிரகடனத்தை ரத்து செய்யக் கோரி நீதிமன்றத்திற்குச் செல்லவும் முடிவு செய்து இருக்கிறார்.

இது தொடர்பில் அவைத்தலைவர் சிவஞானமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணி மான எம். ஏ. சுமந்திரனும் நேற்று தொலைபேசி மூலம் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டனர் எனத் தெரியவந்தது

அவைத் தலைவர் சிவஞானத்தை மனுதாரராக கொண்டு தாக்கல் செய்யப்படும் வழக்கை தாமே முன்னின்று நடத்துவதற்கு சுமந்திரன் இணங்கி இருக்கிறார் எனத் தெரிகிறது.

"ஒரு தனிநபர் நியதிச் சட்டத்தை யாத்து, அறிவித்து, நடைமுறைப்படுத்தும் விநோதம் அல்லது விபரீதம் உலகில் வேறு எங்கும் நடந்ததாக நான் அறியேன். நாடுகளை ஆட்சி செய்த சர்வாதிகாரிகள் கூடத் தம் பெயரில் சட்டங்களைப் பிரகடனப்படுத்தாமல், தமது கட்டளையில் இயங்கிய பொம்மை அரசுகள் மூலமே அதனைச் செய்தனர். இங்கு - வட மாகா

(19ஆம் பக்கம் பார்க்க)

# தரணியெங்கும் தலைவரை கொண்டாடிய தமிழ் உறவுகள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 68 ஆவது பிறந்த நாள் நிகழ்வு நேற்று தரணியெங்கும் கொண்டாடப்பட்டது.

தமிழ் மக்களின் உரிமைக்காக மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரான பிரபாகரன், தமிழீழத் தேசியத் தலைவராக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார்.

தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளையொட்டி தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கிலும், ஸ்ரீலங்காவின் இதர பகுதிகளிலும் பொலிஸாரினதும் இராணுவத்தினரினதும் கண்காணிப்பு நேற்று தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

எனினும், தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வுகள் நாட்டின் பல பாகங்களிலும் நேற்று பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் கொண்டாடப்பட்டன.

யாழ்ப்பாணம், வடமராட்சி - வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பூர்வீக வீட்டின் முன்பாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்தால் பிறந்தநாள் நிகழ்வு கொண்டாடப்பட்டது.


அதன்போது பொதுமக்களுக்கு எள்ளுருண்டைகள் மற்றும் இனிப்புக்கள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் மாணவர்களால் தலைவர் பிரபாகரனுக்கு பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள பிரத்தியேக இடமொன்றில் ஒன்றுகூடிய மாணவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப் படத்தை வைத்து கேக் வெட்டி பிறந்த நாளைக் கொண்டாடினர்.

அத்துடன் நல்லூர் ஆலய முன்றலில் யாசகர் ஒருவர் ஆலய வழிப்பாட்டுக்கு வருகை தந்தவர்களுக்குத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளையொட்டி இனிப்புக்களை வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வுகள் புலம்பெயர் தேசமெங்கும் நேற்று கொண்டாடப் பட்டது.



# யாழில் கணினி விஞ்ஞானத்தில் இரு பேராசிரியர்கள் நியமனம்





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். கணினி விஞ்ஞானத்துறையின் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.ரமணன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். சியாமளன் ஆகியோரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று 26 ஆம் திகதி, சனிக்கிழமை, காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி ஏ. ரமணன், கலாநிதி எம்.சியாமளன் ஆகியோரின் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த, மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள், நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன இந்தப் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், கணினி விஞ்ஞானத்துறையின் முன்னாள் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஏ.ரமணன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம். சியாமளன் ஆகியோர் கணினி விஞ்ஞானத்தில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணினி விஞ்ஞானத் துறை தாபிக்கப்பட்டு 30 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இவர்கள் இருவரும் முதன் முதலாக கணினி விஞ்ஞானத் துறையில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 12.12.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பிரதான உணவகம் - I | திருநெல்வேலி |
| முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட உணவகம் | கலாசாலை வீதி, திருநெல்வேலி. |
| மருத்துவ பீட உணவகம் | திருநெல்வேலி |
| மருத்துவ மாணவர் விடுதி உணவகம் | யாழ்ப்பாணம் |
| சேர்.பொன்.இராமநாதன் அவைகாற்று மற்றும் காண்பிய பீட உணவகம் | மருதனார்மடம் |
| ஆனந்தகுமாரசுவாமி மாணவர் விடுதி உணவகம் | திருநெல்வேலி |
| சித்த மருத்துவ அலகு உணவகம் | கைதடி |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000006000268 இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/=இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000006000276 இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.


மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 0212226716) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**25.11.2022**



அலையன்ஸ் நிதி நிறுவனத்தின் ஓர் சூழல் நேய அம்சமாக பத்தாயிரம் பனைவிதை நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த 22ஆம் திகதி திகதி வல்லிபுர ஆழ்வார் ஆலய கடற்கரைச் சூழலில் முதலாவது பனம் விதை நடும் நிகழ்வு இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# 29 கிலோ கேரள கஞ்சாவுடன் கிளிநொச்சியில் இருவர் கைது!

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலை பகுதியில் 29 கிலோ 150 கிராம் கஞ்சாவுடன் நேற்று (சனிக்கிழமை) இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழில் இருந்து கிளிநொச்சி நோக்கி கப் ரக வாகனத்தில் கஞ்சா ஏற்றி வருவதாக பளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, முகமாலை பகுதியில் வைத்து 29 கிலோ 150 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி அளவிலான கஞ்சா சூட்சுமமான முறையில் கப் ரக வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குலரத்ன தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தீவிர சோதனையின் போதே கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கைதான சந்தேக நபர்கள் இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என பளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.






காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பச்சோந்தி சட்டவாட்சி

பௌத்த, சிங்களப் பேரினவாத அரச இயந்திரத்தின் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை எதிர்கொண்டு துவண்டு கிடக்கிறது ஈழத் தமிழினம். தமிழ் தேசிய இனத்தின் சொந்த வரலாற்றில் அது மறந்துவிட முடியாத மிக முக்கியமான தினம் இன்று. ஆம், இன்று மாவீரர் நாள்.

தம் இனத்துக்காக தங்களையே தற்கொடையாக்கி, இந்த விடுதலைப் போராட்ட வேள்வியில் ஆகுதியாகத் தந்த வீர மறவர்களின் உயரிய ஈகத்தை நினைவேந்தும் நாள்.

தமிழினத்தின் ஆயுதப் போராட்டத்தை அங்கீகரிக்க மறுப்பவர்கள் கூட, அந்தப் போராட்டத்தில் தங்களையே தற்கொடையாக தந்த அந்த யுகபுருஷர்களின் ஈகத்தை – தியாகத்தை – எண்ணித் தலை வணங்குவர். மனித நேயமும், மனிதப் பண்பியல்பும் கொண்ட எவரும் இதற்கு விதிவிலக்கல்லர்.

அந்த வீரமறவர்களை தமிழர்கள் ஒன்று சேர்ந்து நினைவேந்தும் நாள் இது.

இன வன்முறைகளினாலும், அடக்குமுறைகளினாலும், கோர யுத்தத்தினாலும், பேரழிவுகளையும், இழப்புகளையும், துன்ப துயரங்களையும் சந்தித்து நிற்கும் தமிழினத்துக்கு இழப்புகள் தொடர்பில் நினைவேந்தல் மேற்கொண்டு, மனதை ஆற்றுப்படுத்தும் உரிமை இருக்கின்றது. அதையே தமிழினம் இன்று ஆற்றுகின்றது.

சர்வதேச அளவில் அடிப்படை மனித உரிமையாக மதிக்கப்படுவது இந்த நினைவேந்தல் உரிமை.

இழப்பின் ஆறுதலுக்கான மனித குல உரிமை அது.

அதுவும் பேரிழப்பையும் போரவலங்களையும் சந்தித்த ஒரு சமூகம் அந்தத் துன்ப, துயரங்களில் இருந்து மீண்டெழுவதற்கும், தன்னை மீள உயிர்ப்பித்துக் கொள்வதற்கும் இந்தக் கூட்டு நினை வேந்தல் மிக முக்கிய அடிப்படை மார்க்கம். இன்றைய கூட்டு நினைவேந்தல் மூலம் தன்னை மீள உயிர்ப்பித்துக் கொள்கிறது தமிழர் தேசம்.

தென்னிலங்கைச் சிங்களத்தின் – அதிகார வர்க்கத்தின் – எதேச்சாதிகாரத்தின் ஒரு வடிவை இன்று நாம் வேறுபடுத்தி அவதானிக்க ஒரு வாய்ப்புக் கிட்டி இருக்கின்றது. யுத்தம் முடிந்த கடந்த 13 ஆண்டுகளிலும் இலங்கையின் பாதுகாப்புச் சட்டங்களில் ஏதும் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. சட்டங்கள் அப்படியே இருக்கின்றன. ஆனால் அரசியல் தலைமைத்துவங்கள் தான் அவ்வப்போது மாறி இருக்கின்றன.

எனினும் தமிழர்களின் நினைவேந்தல் உரிமை தொடர்பில் சிங்களப் பொலிஸ் மற்றும் படையணிகளின் அணுகுமுறை காலத்திற்கேற்ப ஒன்றுக்கொன்று தலைகீழாகவும், முரண்பாடாகவும் இருக்கும் சட்ட ஆட்சி நிலைமையை இங்கு நாங்கள் காண்கிறோம்

சட்டங்கள் மாறவில்லை. ஆயினும் அரசியல் தலைமைகள் மாறினால் சட்ட வியாக்கியானம் மாறும் விநோதமான – விபரீதமான – ஒரு சட்டவாட்சி நிலவும் ஒரு நாட்டில் நாம் வாழ்கின்றோம் என்பதுதான் உண்மை.

# நாடாளுமன்ற பாதீட்டுத்திட்ட காரியாலயம்; அரசியல் கட்சித் தலைவர்கள் இணக்கம்!




நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்ட காரியாலயம் ஸ்தாபிப்பதற்கான ஆரம்ப சட்டமூலத்துக்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான தெரிவுக் குழுவின் உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்டம் தொடர்பான காரியாலயத்தை ஸ்தாபிப்பதற்கான பேச்சு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் இடம் பெற்றது.

வரவு – செலவுத் திட்டம் தொடர்பான காரியாலயத்தை ஸ்தாபிக்கும் சட்டமூலம் தொடர்பில் ஏதேனும் திருத்தம் காணப்படுமாயின் அதனைத் தெரிவுக்குழு கூடும் சந்தர்ப்பத்தில் முன்வைக்குமாறு கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்டம் தொடர்பான காரியாலயம் ஒன்று ஸ்தாபிக் கப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 14 ஆம் திகதி நாடா ளுமன்றத்தில் ஆற்றிய 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான உரையில் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.



# அடக்குமுறையால் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது!

## நளின் பண்டார இடித்துரைப்பு



நாட்டு மக்கள் பொழுது போக்கிற்காக போராட்டத்தில் ஈடுபடவில்லை. பாதிக்கப்பட்டுள்ளதால் வீதிக்கு இறங்குகிறார்கள். போராட்டத்தை முடக்குவதை விடுத்து போராட்டம் தோற்றம் பெறுவதற்கான காரணத்துக்கு தீர்வு வழங்க ஜனாதிபதி அவதானம் செலுத்த வேண்டும். அடக்குமுறையால் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். போராட்டத்தின் விளைவால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பதவி விலகியது. மஹிந்த ராஜபக்ஷ மே மாதம் 09 ஆம் திகதி முழு நாட்டுக்கும் தீ வைத்து விட்டு பதவி விலகினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மே மாதம் 12 ஆம் திகதி பிரதமராகப் பதவி ஏற்றார். பதவியேற்றதன் பின்னர் காலி முகத்திடல் போராட்டம் பாதுகாக்கப்படும்,அவர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வரை போராட்டத்துக்கு ஆதரவாக செயற்பட்டார். போராட்டத்துக்கு இவர் நிதி வழங்கினாரா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் போராட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டார். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நிபந்தனையின் அடிப்படையில் பிரதமர் பதவியை ஏற்க இணக்கம் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை போல் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் பிரதமர் பதவியை ஏற்க முன்செல்லவில்லை.

ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் வகையில் பிரதமர் பதவியை ஏற்கும் தேவை எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லை. அவர் முன்வைத்த நிபந்தனைகளை அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்கவில்லை. நிபந்தனையில்லாமல் ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார் அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களை இராணுவம் கொண்டு அடக்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நாட்டு மக்கள் பொழுது போக்கிற்காகப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. பாதிக்கப்பட்டுள்ளதால் வீதிக்கு இறங்குகிறார்கள்.

போராட்டத்தை முடக்குவதை விடுத்து போராட்டம் தோற்றம் பெறுவதற்கான காரணத்துக்கு தீர்வு வழங்க ஜனாதிபதி அவதானம் செலுத்த வேண்டும். பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் ஒருபோதும் போராட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது. – என்றார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2022




“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.”
- கஸ்டேர்லிங் மோர்ட்டன் -
(அமெரிக்க அரசியலாளர்)




அண்மையில் நிப்போன் பெய்ண்ட் நிறுவனத் தினரால் மதவாச்சி, மைத்திரிபால சேனநாயக்க மத்திய கல்லூரிக்கு மீண்டும் வண்ணம் பூசுவதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக ஒரு தொகை வண்ணப் பூச்சுக்களை நிப்போன் பெயிண்ட் நிறுவனத்தினர் நன்கொடையாக வழங்கியிருந்தனர்.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308


Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi

- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்தோனேசிய அமைச்சரும் உலமாக்களும் டோவலின் அழைப்பில் இந்தியா வருகின்றனர்


IMAGE : ANI/@MOHMAHFUDMD - TWITTER



இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் அழைப்பின் பேரில், இந்தோனேசிய உயர்மட்ட அமைச்சர் டாக்டர் முகமது மஹ்ஃபுட் எம்.டி அடுத்த வாரம் டெல்லிக்கு வரவுள்ளார்.

டாக்டர் முகமது மஹ்ஃபுட் இந்தோனேசியாவின் அரசியல், சட்டம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சராக உள்ளார். அவருடன் உலமாவின் உயர்மட்டக் குழுவும் வரவுள்ளது.

நவம்பர் 28 அன்று (நாளை), இந்தோனேசியாவில் இருந்து வருகை தரும் உலேமா அவர்களின் இந்திய சகாக்களுடன் உரையாடுவார்கள். ‘இந்தியாவிலும் இந்தோனேசியாவிலும் மதங்களுக்கிடையிலான அமைதி மற்றும் சமூக நல்லிணக்க கலாச்சாரத்தை வளர்ப்பதில் உலமாக்களின் பங்கு’ என்ற தலைப்பில் விவாதம் நடைபெறும்.

“இஸ்லாமிய சமுதாயத்தில் உலமாக்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றனர், இத்தகைய கலந்துரையாடலின் நோக்கம், சகிப்புத்தன்மை, நல்லிணக்கம் மற்றும் அமைதியான சகவாழ்வை மேம்படுத்துவதற்கும், வன்முறை தீவிரவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்ப்பதற்கும் ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்லக்கூடிய இந்திய மற்றும் இந்தோனேசிய உலமாக்கள் மற்றும் அறிஞர்களை ஒன்றிணைப்பதாகும். ஒரு வட்டாரம் ஏ.என்.ஐ. இடம் கூறியது.

மொத்தம் மூன்று அமர்வுகள் இருக்கும். முதலில் – இஸ்லாம்: தொடர்ச்சி மற்றும் மாற்றம், இரண்டாவதாக – மதங்களுக்கு இடையிலான சமூகத்தை ஒத்திசைத்தல்: பயிற்சி மற்றும் அனுபவம் மற்றும் கடைசி அமர்வு – இந்தியா மற்றும் இந்தோனேசியாவில் தீவிரவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்ப்பது.

இந்த விஜயத்தின் போது, இந்தோனேசியாவைச் சேர்ந்த உலமா மற்ற மதங்களைச் சேர்ந்த தலைவர்களுடன் உரையாடுவார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டோவல் தொடக்க மற்றும் நிறைவுக் கருத்துக்களை வெளியிடுவார் என்றும், பயணத்தின் முடிவில் கூட்டு அறிக்கையும் வெளியிடப்படும் என்றும் தெரிகிறது.

இந்தோனேசியா உலகின் மிகப்பெரிய முஸ்லிம் மக்கள் தொகையைக் கொண்டுள்ளது மற்றும் இந்தியா உலகில் இரண்டாவது பெரிய முஸ்லிம்களின் தாயகமாகும். இந்த ஆண்டு மார்ச் மாதம் இரண்டாவது இந்தோ – இந்தோனேசியா பாதுகாப்பு உரையாடலுக்காக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டோவல் இந்தோனேசியா சென்றிருந்தார். பின்னர் டோவல் அமைச்சர் மெஹ்ஃபுத்தை இந்தியாவிற்கு அழைத்திருந்தார்.




# உயர்கல்வி நிறுவனங்களின் சர்வதேசத் தர வரிசையில் 7 இந்தியப் பல்கலைகள்!

டைம்ஸ் உயர் கல்வி (THE) வெளியிட்ட உலகளாவிய வேலைவாய்ப்பு பல்கலைக்கழக வங்கி மற்றும் கணக்கெடுப்பு (GEURS) அறிக்கையில் ஏழு இந்தியப் பல்கலைக்கழகங்கள் இடம்பெற்றுள்ளன. இந்திய தொழில்நுட்பக் கழகம், டெல்லி (IIT - D) இந்தியப் பல்கலைக்கழகத்தில் மிக உயர்ந்த தரவரிசையில் உள்ளது. உலக அளவில் 28 ஆவது இடத்தைப் பிடித்தது. 2021 ஆம் ஆண்டின் தரவரிசையில், இது 27 ஆவது இடத்தைப் பிடித்தது.

உலகளவில் 58 ஆவதாக, பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகம், இரண்டாவது உயர் தரவரிசையில் உள்ள இந்தியப் பல்கலைக்கழகம் ஆக மிளிர்கிறது. அதைத் தொடர்ந்து பாம்பேயின் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (ஐ.ஐ.டி. – பி) 72 ஆவது இடத்தில் உள்ளது. இது 2021 இல் 97 வது இடத்தில் இருந்து ஒரு பெரிய முன்னேற்றத்தை பதிவு செய்தது.

HR கன்சல்டன்சி எமர்ஜிங் வடிவமைத்து, டைம்ஸ் உயர் கல்வி (THE) மூலம் பிரத்தியேகமாக வெளியிடப்பட்ட தரவரிசை, சிறந்த நிறுவனங்களில் பணியமர்த்துபவர்கள் எந்தப் பல்கலைக்கழகங்களை பணியிடத்திற்குத் தயார்ப்படுத்துவதில் சிறந்தவர்கள் என்று நினைக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது.

இந்திய மேலாண்மை நிறுவனம், அகமதாபாத் (IIM - A) மட்டுமே பட்டியலில் இடம்பெற்ற ஒரே IIM ஆகும். இது 154வது இடத்தில் உள்ளது. ஐஐடி காரக்பூர் பட்டியலில் 155 வது இடத்தில் உள்ளது. அமிட்டி பல்கலைக்கழகம் மற்றும் பெங்களூர் பல்கலைக்கழகம் ஆகியவை பட்டியலில் சேர்க்கப்பட்ட மற்ற இரண்டு பல்கலைக்கழகங்கள் ஆகும்.


மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் முதலிடம் பிடித்துள்ளது. பட்டியலில் முதல் 10 பல்கலைக்கழகங்களில் ஐந்து அமெரிக்காவைச் சேர்ந்தவை. இரண்டு ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்தவ (யுகே). ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இங்கிலாந்தின் சிறந்த பல்கலைக் கழகமாக உள்ளது. ஒரு பல்கலைக்கழகம் – டோக்கியோ பல்கலைக்கழகம் – ஜப்பானில் இருந்து வந்தது, ஒன்று, சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம். இவை முதல் 10 இடங்களுக்குள் இருந்தன.






‘எம்.ஐ.டி. மாணவர்கள், ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள், மேம்பட்ட கணினி நெட்வொர்க்குகளை உருவாக்குதல், துணிகர மூலதன பரிவர்த்தனைகளைப் பாதுகாத்தல் மற்றும் உயிரி தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட தொழில் முனைவோர் கண்டுபிடிப்புகளில் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்று ஆய்வு அறிக்கை கூறுகிறது.

பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் சீனா ஆகியவை வேலைவாய்ப்பு தரவரிசையில் சிறந்த பிரதிநிதித்துவம் பெற்ற நாடுகளில், இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவுடன் உள்ளன என்று அது மேலும் கூறியது.



# ஹெரன பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கைகள்!

## ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



ஹெரன பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. இந்தப் போராட்டம் வெற்றியளிக்க ஏனைய தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மஸ்கெலியா, சாமிமலை கவரவில, ஆகிய பகுதிகளுக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்ட ஜீவன் தொண்டமான், நிலைமையை நேரில் அவதானித்தார். தொழிலாளர்களுடனும் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே, தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பான அறைகூவலை அவர் விடுத்தார்.

இது தொடர்பில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு –

ஹெரன பெருந்தோட்ட நிறுவனம் தொடர்பில் தொழிலாளர்கள் மத்தியில் பல குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்நிலையில் தொழிலாளர்களின் வீட்டுத் தோட்டத்தையும் 'பெக்கோ' மூலம் அகற்றுவதற்கு தோட்ட நிர்வாகம் முற்பட்டுள்ளது. இதனை நாம் தடுத்து நிறுத்தினோம். இது சம்பந்தமாக தோட்ட நிர்வாகத்துடனும், பெருந்தோட்டத்துறை அமைச்சருடனும் பேச்சு நடத்தினோம். நிறுவனத்திடமிருந்து உரிய பதில் கிடைக்கவில்லை. எனினும், வீட்டு தோட்டங்களை அகற்றும் முயற்சிக்கு பெருந்தோட்டத்துறை அமைச்சர் ஊடாகத் தடை விதித்துள்ளோம். அகற்றும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

20 வீதமானோரே தோட்ட மக்கள் எனவும், ஏனையோர் வெளியாள்கள் எனவும் தோட்ட நிர்வாகம் கூறியது. ஆனால் நேரில் சென்று நிலைமையை ஆராய்ந்தேன். 20 வீதமானோர் என்பது தோட்டத்தில் வேலை செய்பவர்கள். ஏனைய 80 வீதம் அந்த தோட்டத்தை சேர்ந்த இளைஞர்கள். அங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள். அவர்களை வெளியார் எனக் கூறமுடியாது.

இந்நிலையில்,தேயிலை மீள் பயிர்ச்செய்கை செய்யபோவதாக நிர்வாகம் கூறுகின்றது. ஆனால்தோட்டங்கள் காடாகியுள்ளன. அந்தப் பகுதிகளில் மீள் பயிரிடல் செய்யலாம். மக்களின் காணிகளில் கை வைக்க வேண்டிய அவசியம் இல்லை. பொலிஸாரைக் களமிறக்கி தொழிலாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கையை நாம் அனுமதிக்கப் போவதில்லை.

எனவே, ஹெரன பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக அப்கோட், லிந்துலை பகுதிகளில் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்கின்றோம். தொழிலாளர்கள் வழமைபோல் வேலைக்கு செல்வார்கள். ஆனால் தோட்டத்தில் இருந்து ஒரு கிராம் கொழுந்துகூட வெளியில் செல்லக்கூடாது. சிலவேளை இரவுவேளை கொண்டு செல்ல முற்படலாம். அதற்கு இடமளிக்கக் கூடாது. தோட்ட இளைஞர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனைய தொழிற்சங்கங்களும் ஆதரவு வழங்கவேண்டும். தாக்கவரும் பாம்பை, தலையில் அடித்தால்தான் நமக்கு பாதுகாப்பு. – என்றார்.

# ஐஸ் போதைப்பொருள்கள் வைத்திருந்தால் மரணதண்டனையை வரவேற்கிறது இ.தொ.கா.



ஐஸ் என்றழைக்கப்படும் கிறிஸ்டல் மெத்தம் பெட்டமைன் எனும் போதைப் பொருளை 5 கிராம் அல்லது அதற்கு மேல் வைத்திருப்பவர்கள் அல்லது கடத்துபவர்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுள்தண்டனை விதிக்கப்படலாம் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி தெரிவித்தமை வரவேற்கத்தக்க விடயம் என இ.தொ. கா. தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு –

தனிப்பட்ட ஒருவரின் இலாபத்துக்காக தடைசெய்யபட்ட பொருள் என்று அறிந்தும் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றமை மாபெரும் குற்றமாகும். கடுமையான தண்டனைகள் ஊடாகவே இவ்வாறான செயற்பாடுகளை முற்றிலும் இல்லாதொழிக்க முடியும். பாதுகாப்பு பொது செயலாளரின் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்க விடயமாகும்.

நாட்டில் 22 வயது முதல் 26 வயதுக்குட்பட்ட தரப்பினரே இந்த போதைப் பொருளுக்கு அதிகளவில் அடிமையாகியுள்ளனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை குறிப்பிட்டுள்ள நிலையில் இவ்வாறான கடுமையான தண்டனைகள் ஊடாகவே இளைய சமுதாயத்தினரை சரியான பாதைக்கு இட்டுச்செல்ல முடியும் எனவும், பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சியின் இந்தச் செயற்பாடு வரவேற்கத்தக்கது எனத்தெரிவித்துள்ளார்.

# கொவிட் காலத்தில் நடைமுறையான சுகாதார நடைமுறைகளை பின்பற்றுக!

## மக்களுக்கு அறிவுறுத்து

காய்ச்சல் மற்றும் பல வைரஸ் நோய்கள் இந்த நாள்களில் அதிகரித்து வருகின்றன என சிறுவர் சுவாச நோய் நிபுணர் வைத்தியர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனவே சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

கொரோனா காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சுகாதாரப் பழக்கவழக்கங்களை மீண்டும் பின்பற்றினால் இந்த வைரஸ் நிலைகளில் இருந்து தற்காத்துக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக அனுமதிகளுக்கான வெட்டுப்புள்ளிகள் விரைவில் வரும்!

## கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு



பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் விரைவில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலை உபகரணங்களுக்கான செஸ் வரியை நீக்குவது தொடர்பில் நாளை (திங்கட்கிழமை) அமைச்சரவையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையுடன் வர்த்தகத்தை அதிகரிக்க விரும்புவதாக பங்களாதேஷ் தெரிவிப்பு!



பங்களாதேஷிற்கும் தெற்காசிய நாட்டுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கு இலங்கையுடன் நேரடி கப்பல் இணைப்பை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் யு.மு. அப்துல் மொமென் வலியுறுத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை முன் கூட்டியே முடிப்பதற்கான பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கத்தின் 22 ஆவது அமைச்சர்கள் கூட்டம் பங்களாதேஷில் இடம்பெறும் நிலையில், அங்கு விஜயம் செய்துள்ள பிரதமர் அலி சப்ரியுடன் பங்களாதேஷின் வெளிவிவகார அமைச்சர் ஒரு சந்திப்பை நடத்திய போது இந்த முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பின் போது, இருதரப்பு உறவுகளின் பரந்த அளவைப் பற்றி விவாதித்த இரு தலைவர்களும் இரு நாட்டு மக்களின் மேம்பாட்டுக்காகவும் பிராந்தியத்தின் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காகவும்நெருக்கமாக இணைந்து பணியாற்ற நம்பிக்கை தெரிவித்தனர்.

மேலும் இதன்போது, பங்களாதேஷில் இருந்து மலிவு விலையில் விவசாயப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களை இறக்குமதி செய்வதை அதிகரிக்குமாறு இலங்கையை மொமன் வலியுறுத்தியுள்ளார்.

பங்களாதேஷுடன் நெருங்கிய பங்காளியாக செயற்படுவதற்கு தமது நாடு ஆர்வமாக உள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சமபோஷ விற்பனைக்கு நீதிமன்றத்தால் தடை!

## மொறவக்க நீதிமன்று உத்தரவு



சமபோஷ என்ற வர்த்தக நாமத்தில் மேலதிகதானிய உணவுகளை விநியோகம் செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதித்து மொறவக்க நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தப் பொருள்களைக் கைப்பற்றி பரிசோதனைக்கு அனுப்பியதில் அஃப்லாடோக்சின் அளவு அதிகமாக இருந்ததை வெளிப்படுத்தியதாக நீதிமன்றத்தில் அறிக்கை அளித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே, மொறவக்க பிரதேசத்துக்கு உட்பட்ட இந்தப்பொருளின் விற்பனையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யுமாறும், தற்போது சந்தையில் உள்ள பொருள்களின் இருப்புகளை உடனடியாக அகற்றுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I | English for all | Sunday the 27th of November 2022


We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

# An Itchy Surprise



Evan looked up at the clock in the school gymnasium. It was already nearly five o'clock. He would have to leave soon to be home in time for dinner. Evan had been practicing basketball and had lost track of the time. Now he would have to hurry. He had heard that there was a shortcut from his school to his street, so today he decided he would take it. He changed into his regular clothes, put his sneakers back on, and started for home. The shortcut led through a small park that Evan had never seen before, and he wanted to stop and explore. But he knew he would be late if he did, so he hurried home. Tomorrow, he promised himself, he would look around that park.

**1. Which word tells a reader the most about this text?**

A. shortcut   B. explore
C. park   D. five

**2. Which event happens first?**

A. Evan changes into his regular clothes.
B. Evan promises himself to look around the park.
C. Evan discovers a small park.
D. Evan decides to take a shortcut.

**3. Which definition of park is used in this text?**

A. settle   B. a road
C. leave your car   D. a place to play

**4. What does it mean to take a shortcut?**

A. to take a new way somewhere
B. to take a longer way somewhere
C. to take a shorter way somewhere
D. to take a dangerous way somewhere

**5. What does it mean to lose track of time?**

A. to know what time it is
B. to not pay attention to the time
C. to not be able to find a clock
D. to buy a new clock

As soon as school ended, Evan hurriedly got his books and assignments together. He put them in his backpack and zipped it up, and then he quickly exited the building. He headed for a small park that he had found the day before. The park had a small, clear pond, plenty of trees, and some grassy areas, too. There were even some geese and ducks occupying the pond. Evan didn't notice anyone in the park that day; he had it all to himself. For an hour, he explored, wandering all over the park. Then he noticed the sun beginning to set. It was getting cooler, too. It was time for him to think about getting home. He gathered his jacket tighter around him, quickly threw his hood over his head, and went on his way. He would definitely be back.

**1. Which is not at the park?**

A. geese
B. a pond
C. trees
D. rabbits



**2. What is the setting?**

A. a bus
B. Evan's house
C. a park
D. the mall

**3. What do context clues tell you about the meaning of the word occupying?**

A. The ducks and geese are flying over the pond.
B. The ducks and geese are living on the pond.
C. The ducks and geese are near the pond.
D. The ducks and geese are afraid of the pond.




# King Midas and The Golden Touch




Midas, a king, once conducted a brilliant job for a Satyr and received a boon from Dionysus, the God of Wine. Midas asked for the transformation of everything he touched into gold as his wish. Despite Dionysus' best efforts to persuade him otherwise, Midas persisted that his wish was a good one, and it was granted!

Midas was delighted as he touched everything and turned it to gold. He was soon famished. He took a bite of food, but it had changed to gold in his hand, and he couldn't eat it! When Midas' beloved daughter saw his distress, she wrapped her arms around him to console him, and she, too, turned to gold!

Midas exclaimed, "The golden touch is no blessing."

He cried as he walked down to the river. The sand of the river turned as yellow as "gold" King Midas washed away his hand in the river and the curse of the golden touch flowed away. When he went back to his palace, everything was normal again. Did you know this is one of the most popular moral stories for kids?

*Moral of the story: Greed can always fire back.*

**" TO BE PREPARED FOR WAR IS ONE OF THE BEST MEANS OF PRESERVING PEACE" - GEORGE WASHINGTON**

# An Itchy Surprise



Evan was preparing for bed when he noticed some red patches on his arms and hands. At first, he didn't worry about it, but soon, his arms and hands began to itch, so he went downstairs to tell his father about it. His dad examined the red patches and said, "It looks like some sort of rash."

"But how did I get it?" Evan wanted to know.

"Usually people get rashes because something irritates their skin or because they're allergic to something," his dad answered.

"But I'm not allergic to anything," Evan said. "How could I get a rash if I'm not allergic to anything?" "Well, you could also get a rash if something irritates your skin. Sometimes laundry detergents do that," said his dad.

Evan checked, but the laundry detergent was the same brand the family always bought. He had never gotten a rash from it before, so that probably wasn't the problem. When he told his father, his dad said, "Sometimes people get rashes from plants, too. Have you been around different plants?" "Well," Evan answered, "I've been spending time at that park a few blocks away. Maybe something there caused this."

"Maybe you're right," his dad said. "Tomorrow, we'll go take a look. For tonight, put some cream on your rash, and you'll probably feel better."

Evan followed his dad's advice, and finally drifted off to sleep.

The next morning, Evan and his father walked to the park Evan had discovered. Evan showed his dad the dirt path he had been exploring just a day earlier, and the two walked along it for a bit. Suddenly his dad stopped and pointed. "Is that where you were?" he asked. Evan nodded.

"Now I know what that rash is! It's poison ivy—see? There are some poison ivy plants right there."

Evan looked where his father was pointing and saw the plants with their three shiny dark green leaves. So that's what poison ivy looked like! "Don't worry," his dad said. "We'll go to the drugstore and get you some medicine for that rash.

You'll be fine in few days. But I wouldn't come this way again if I were you."

**1. What is a reasonable prediction about this text based on the title?**

A. The text is about a birthday present.
B. The text is about trees.
C. The text is about getting a rash.
D. The text is about a new friend.

**2. Where will Evan and his dad go next?**

A. to school
B. to their house
C. to the mall
D. to the drugstore

**3. What is the author's purpose?**

A. to inform
B. to persuade
C. to entertain
D. to scare

**4. How does the author show that the detergent didn't cause Evan's rash?**

A. It is the same brand the family always uses, and he has never had a rash.
B. His clothes are not washed with laundry detergent.
C. He did not wash any of his clothes.
D. The laundry detergent bottle is full.

**5. What is another activity that Evan likely enjoys?**

A. hiking B. reading
C. playing video games D. singing

**6. What do you predict Evan will do from now on?**

A. He will go up the dirt path again.
B. He will stay away from poison ivy.
C. He will learn to ride a bicycle.
D. He will tell his father he does not have a rash.



**7. What does Evan learn in the text?**

A. how to do laundry
B. where the nearest park is
C. what poison ivy looks like
D. where the drugstore is

**8. Which text has a similar theme?**

A. a fictional story about a boy who thinks he sprained an ankle and tells his dad
B. a nonfiction text about native plants
C. a letter to a mayor about keeping parks clean
D. a medical book with pictures of a poison ivy rash

---

One Saturday morning, Evan decided to take his skateboard over to the new park he had recently discovered. It was a beautiful day, and he couldn't wait to get outside. After he dressed and ate breakfast, he got his skateboard and helmet. Then he walked over to the park. There were a lot of people there today. For a while, Evan rode around the park on his skateboard. Then he noticed a dirt path he hadn't seen before, sneaking through a small group of pine trees. He hopped off his skateboard and headed over to the path. He was curious about where it went. He wandered along the path for a short distance. Then he flopped down on the grass near one of the pine trees. He looked around, enjoying the view. He was happy he had stumbled onto this place.

**1. When does this text take place?**

A. a Saturday afternoon B. a Tuesday evening
C. a Saturday morning D. a Sunday morning

**2. Which does Evan enjoy?**

A. being outdoors B. skateboarding
C. exploring D. all of the above

**3. Which means stumbled onto?**



A. found by accident
B. hurt
C. hidden
D. hurried through

**4. Which is a synonym for wandered?**

A. ran B. skipped
C. strolled D. slept

**5. What is using the phrase sneaking through to describe the dirt path an example of?**

A. a simile B. alliteration
C. a metaphor D. personification

# In Parliament 2023 Budget debate



I thank the Chair for giving me this opportunity to air my views on the Defense aspect of the Budget.

All inclusive Defence Expenditure for 2023 has increased to Rupees 539 billion. Why?

Are we taxing our people so that the Government could spend so much money on the Military? Is that what the people want? Or are we wanting to keep the Tamils under the Military Boot of the State and that is why so much of money is spent? When are we going to decrease our defence expenditure and move on with our economic regeneration?

Is it not a fact that the root structural causes of the crisis included financing the war to deny the right of self-determination of the Tamils of Sri Lanka?

Not recognising the over 3000 years' continued existence of the Tamils in the North and East of Sri Lanka, in order to repress the Tamils, higher spending on the Military started in 1960. Sri Lanka's Military spending in 1960 was 0.02 Billion Dollars constituting 1.18% of the GDP then.

In 1985 it increased to 0.19 Billion Dollars constituting 3.16% of our GDP. In 2007 the spending was 1.05 Billion Dollars constituting 3.26 of our GDP. At the end of the war in 2009 it was 1.52 Billion Dollars constituting 3.16 of the GDP.

At the end of the war anyone would have thought the expenses on the Military would decrease. But it did not. On an average 2% of the GDP has been spent on Defense annually from 2009 upto date.

There have been thus an increase in expenditure after the war than decrease of our Military expenditure.

All together we have spent from 2009 until 2020 18.84 Billion US Dollars after the war. In 2020 we spent 295 Billion in Sri Lankan currency. In 2021, 331 Billion, in 2022, 376 Billion and we are expecting to spend in 2023 an all round high of Rupees 539 Billion. All these years the Education, Health, Agriculture and other very important Ministries received much less every year. The salaries paid to the Military every year almost equals the salary paid to the public servants as a whole.

As a percentage of GDP, Sri Lanka spent 1.93 % in 2020 on Military expenses whereas Japan which is having external threats spent only 0.99%.

Our Army is the 14th largest Army in the World but we do not face any external threat. Yet our Military personnel are said to be 331000. As a percentage of population in 2018 Sri Lanka (1.46%) was second only to Israel (2%).

The Sri Lankan problem, if any, is not similar to that of Israel. It could be solved very easily if not for the mindsets of the political leaders especially the recent set who have had no hesitation in grabbing power even through blood. In fact we could have saved so much of money and avoided so much of human suffering if our politicians had not thought so

parochially and in an ethnocentric manner and had solved this problem in the 1950s or 60s. Even after the end of the war a mentality has been created in the minds of the people that defense should be the most prioritized expenditure of the budget. Therefore no one including the Opposition Parliamentarians raised objections so far to the increasing defense expenditure of the country.

This state of affairs exists even today though some of our majority community Parliamentarians have started questioning such expenditure after the aragalaya. Even at this juncture of the history of Sri Lanka where people are forced to undergo severe economic difficulties defense expenses are on the rise.

It was maintainable during the war, to assert that defense should have been our topmost expenditure. But when such expenditure continues after the war, year after year, it is an indicator that peace has not arrived. It is an indicator that the powers that be have doubts in their minds with regard to their safety despite the vanquishing of all the top leaders of the protaganists.

The simple formula to bring peace is to sideline the extremist elements within us and implement a moderate solution acceptable to all, realizing that the Tamils have lived continuously in this Country from pre historic times upon a determinable land mass with their own language, culture and civilization intact. Bringing peace into this Country is not a difficult task for a leader with a vision. If the ethnic problems could be solved the defense expenses can then be reduced drastically and that can be used profitably on more deserved sectors of the Country's economy. Instead, we are trying to safeguard the country from an enemy still unborn and unseen. To face an unborn enemy over a hundred thousand Military have been stationed in the North and East.

Speaking of the North where I was Chief Minister for five years after the war, the Military has taken over several Farms of the people and are cultivating them and pocketting the income leaving the owners of such lands on the lurch, plundered out of their livelihoods.

The Army has misappropriated agricultural farms in Vattakachchi (394 acres), Jeyapuram (120 acres), Thiruvaiaru (circa 500 acres), Mulankavil (circa 400 acres) Malayalapuram (798 acres), Muththiankattu (circa 100 acres),Mukkuppam (100 acres of Coconut land) all in the Kilinochchi District, then Vattuvahal (672 acres ). Mullikulam (circa 600 acres), Viswamadu (150 acres), Pulumachinatha Kulam (circa 300 acres ) and Theravil (1200 acres) in the Mullaitivu District.

In Kokkuththoduwai in the Mullaitivu District 25 acres for each family was distributed for cultivation of cadju. All those lands have been appropriated by the Army. Over 25000 acres of land in the Mullaitivu District is in the hands of the Military.

Then circa 500 acres of agricultural lands in Vellankulam in the Mannar District and private lands in the Chettikulam areas in the Vavuniya District have been taken over by the Army.

From the agricultural lands in the Mullaitivu District the Army receives on an average Fifteen Million profit every year..

From the Farms in the Kilinochchi District the Army gets around Thirteen Million profit annually.

Lots of precious agricultural lands which could bring in substantial income for our People are today languishing in the hands of the Forces.

In the Vanni while appropriating People's lands and making profits therefrom the Military have concocted various security concerns to justify their aggression and day light robbery.They have made it out that unless our People work in their Farms they have no prospects of a decent livelihood. On one side the Government prevented large-scale, profitable agricultural Projects being run by the Provincial Council and on the other hand the Military has made the People believe today that they are their only salvation.

If only we close up these Army Camps and hand over these Farms to local Agricultural Cooperative Organisations our Farmers could feed not only the Vanni but the farmers in the Northern Province would be able to contribute substantially to the Agricultural needs of the entire Country. In fact they have done so earlier.

In the Jaffna District over 3000 acres of land are in the possession of the Military. In an area of 3262 acres, there are 43 Army Camps and 98 Army Check Points. There are 41 Military Camps in the Kilinochchi District.

In addition the Military is bent on permanently taking over People's lands in 68 places. Some of the soldiers have complained that they were recruited for war training but now are forced to do menial jobs.

In Vattuvahal in the Mullaitivu District already an Army Camp exists on 672 acres of land. In Keppapilavu the Air Force has appropriated 3000 acres. In Mannar Sannar area 100 acres have been taken over by the Army and Camp has been established. In Mullikulam 600 acres have been taken over by the Army.

In Puliamkulam in the Vavuniya District, the STF has taken over private lands and established Camps. So too at the Maruthodai Junction in Vavuniya.

In Ottisuddan in the Mullaitivu District on 15 acres of Private lands the Army has built their Camp. Including the Cemetry area at the Ottisuddan Junction 50 acres have been seized and an Army Camp has been built.

According to 2019 statistics 679 acres of Private lands and 3178 acres of State lands have been taken over by the Military.But these are Government Statistics. In reality very much more lands are in the hands of the Forces.

For example opposite the Murukandy Temple on the A9 Road on the other side of where the Temple stands, 1702 acres of land is held by the Military.This is the Land about which Honourable Sambandan spoke in Parliament sometime ago pointing out that permanent buildings for the residences of the Soldiers were coming up. No private persons are allowed to enter these lands.

In 2017 our Research Organizations in the North concluded that over 30000 acres of land have been expropriated by the Forces in the

Mullaitivu area alone. All these are areas where Tamils lived for centuries. Our economy is imprisoned in these lands now.

There are many modern and useful changes that could be introduced to strengthen our Agricultural sector in these areas. If we could use modern methods to save water, to control floods, to manage underground water, to increase yields, to enhance physical resources in these areas our Farmers would benefit and consequently the Country would benefit.

Instead we are allowing the Army to hold on to People's lands in a dog in the manger fashion.

We could use some of these Farms for inland seed production, Training programs and enhancement of Agricultural technical knowhows.

We could at the same time advise and educate our Farmers in the making of organic manure and related matters.

Honourable Members would have by now realised why such large amounts of moneys are allocated to the Forces. Inter alia it is to keep the Tamil People under the Military Boot and to prevent the Northern and Eastern Tamil speaking people from economically regenerating. The Government prevents diaspora investments in the North and East and continue to spend such large sums of money on their Armed Forces. Government might consent to allow diaspora investments under an Unitary Constitution. But that is of no use to us. The Central Government alone will decide what we should do with such investments. Going by the past their decisions would prejudice the wellbeing of the Tamils of the North and East.

We need to have a needs' assessment done to the North and East and

identify our priorities according to the needs of our People not to feed the Central Government's ethnocentric whims and fancies. To do that we need to jettison the present Unitary Constitution and devolve powers-substantially to the periphery. It is our view that only a confederal constitution could give the Tamil people freedom and elbow space to prosper.

Hence I would appeal to the Government to reduce their Military spending, decrease their Military numbers and use the money saved thereon, on relieving the economic burdens of the People. Thank you.

***Justice C.V.Wigneswaran M.P.***



காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# கலியின் ஆரம்பம்



பஞ்சபாண்டவர்களில் ஒருவரான சஹாதேவன் சந்தைக்குள் நுழைந்தான். அழகான குதிரையை அவன் பார்த்தான். உடனே குதிரையின் உரிமையாளரை நெருங்கி, குதிரை என்ன விலை? என்று கேட்டான்.

குதிரையின் உரிமையாளரோ,

ஐயா! இந்த குதிரை விற்பனைக்கு அல்ல. நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொன்னால், குதிரையை இலவசமாகவே கொடுப்பேன் என்றார்.

சகாதேவன் உடனே, சரி கேள்வியைச் சொல்லுங்கள் என்றான்.

குதிரையின் உரிமையாளர், நன்றாகக் கவனியுங்கள்! பிறகு பதில் சொல்லுங்கள்!

ஒரு பெரிய கிணறு. அதில் உள்ள தண்ணீரைக் கொண்டு ஏழு சிறிய கிணறுகளை நிரப்பலாம். ஆனால், அந்த ஏழு கிணறுகளில் இருக்கும் தண்ணீரை எடுத்து, மறுபடியும் அந்த பெரிய கிணற்றில் ஊற்றினால், பெரிய கிணறு நிரம்பவில்லை இது ஏன்?. நன்றாக யோசித்து பதில் சொல்லுங்கள் என்றார்.

சஹாதேவனால் பதில் சொல்ல முடியவில்லை. அங்கேயே சந்தையில் உட்கார்ந்துவிட்டான்.

சற்று நேரத்தில்.... சகாதேவனை தேடிக்கொண்டு நகுலனும் சந்தைக்கு வந்து விட்டான். அவனும் குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான்.

குதிரையின் உரிமையாளர், நகுலனிடம் ஒரு கேள்வி கேட்டார். ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லிவிட்டு, குதிரையை இலவசமாகவே பெற்றுக் கொள்ளுங்கள்.

துணி தைக்கும் ஊசி இருக்கிறது அல்லவா?, அதன் ஓட்டையின் வழியாக ஒரு யானை புகுந்து, அடுத்த பக்கம் போய்விட்டது. ஆனால் யானையின் வால் மட்டும் அந்த ஓட்டையின் வழியாகப் போக முடியவில்லை. ஏன்? என்றார்.

நகுலனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் சந்தையில் உட்கார்ந்திருந்த சஹாதேவனுடன் சேர்ந்து உட்கார்ந்துவிட்டான்.

அதன் பிறகு ஒரு சில நிமிடங்களில், அர்ஜுனனும் அங்கு வந்தான். அவனும், குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான். குதிரையின் உரிமையாளர், அர்ஜுனனிடமும் கேள்வி கேட்டார்.

ஐயா! ஒரு வயல் காட்டில் நன்றாக விளைந்து இருந்தது. அதற்கு வேலியெல்லாம் போட்டு பாதுகாப்பாக வைத்து இருந்தார்கள். ஆனால் அறுவடை காலத்தில், அந்த வயல் காட்டில் எதுவுமே இல்லை. வேலியெல்லாம் அப்படியே இருந்தது. அப்படி இருந்தும் விளைந்த தானியங்களை எல்லாம் யார் எடுத்தார்கள்?

பதில் சொல்லிவிட்டு, குதிரையை கொண்டு செல்லுங்கள் என்றார். அர்ஜுனனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் ஆலோசனை செய்தபடி அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

சகோதரர்கள் மூவரும் இப்படியே உட்கார்ந்திருக்க, அரண்மனையில் அவர்களைக்காணாமல், தர்மர் திகைத்தார். பீமனைக் கூப்பிட்டு, தம்பி! நம் தம்பிகள் மூவரையும் நீண்ட நேரமாக காணவில்லை. நீ போய், அவர்கள் எங்கு இருந்தாலும் தேடி அழைத்து வா! என்றார்.

பீமனும் போய் தேடிப்பிடித்து, அர்ஜுனன், நகுலன், சஹாதேவன் மூவரையும் அழைத்து வந்தான். பாஞ்சாலியோடு அரியணையில் அமர்ந்திருந்த தர்மர், அவர்களைப்பார்த்ததும், அர்ஜுனா! நீண்ட நேரமாக நீயும் உன் தம்பிகளும் இங்கு இல்லை. எங்கே போய் இருந்தீர்கள்? எனக் கேட்டார்.

அதற்கு பதிலாக அர்ஜுனன், நடந்ததை எல்லாம் சொல்லி, குதிரை உரிமையாளர் கேட்ட மூன்று கேள்விகளையும் சொன்னான்.

அதைக் கேட்டதும் தர்மர் நடுங்கினார். அதைப்பார்த்த தம்பிகள் எல்லாரும் திகைத்தார்கள்.

அண்ணா! நீங்கள் நடுங்கும்படியாக என்ன நடந்தது? எனக் கேட்டார்கள்.

தர்மர் பதில் சொல்லத்தொடங்கினார்..

தம்பிகளே! எதிர்காலத்தில் நடக்கப் போகும் விபரீதங்களை, அந்த மூன்று கேள்விகளும் சொல்கின்றன.

அதை நினைத்துத்தான் நடுங்கினேன். ஒவ்வொன்றாகச் சொல்கிறேன் கேளுங்கள் என்று விரிவாகக் கூறினார்.

உங்களிடம் கேள்வி கேட்டவன்
கலி புருஷன்.
அவன் கேட்ட முதல் கேள்வியில்

பெரிய கிணறு என்பது பெற்றோர்கள்.

ஏழு சிறிய கிணறு என்பது அவர்களது பிள்ளைகள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, அவர்கள் எவ்வளவு பேர்களாக இருந்தாலும் சரி! அவ்வளவு பிள்ளைகளையும் காப்பாற்றுவார்கள். இதைத்தான் பெரிய கிணற்றின் தண்ணீரைக்கொண்டு சிறிய கிணற்றை நிரப்பினார்கள் என்பது குறிக்கிறது.

ஆனால், அந்த பிள்ளைகளோ, அவ்வளவு பேர்களும் சேர்ந்தால் கூட, தங்கள் பெற்றோரை காப்பாற்ற மாட்டார்கள். இதைத்தான் ஏழு சிறிய கிணறுகளில் உள்ள தண்ணீரைக்கொண்டு, பெரிய கிணற்றை நிரப்ப முடியவில்லை என்பது குறித்தது.

அடுத்து இரண்டாவது கேள்விப்படி, இனி வருங்காலங்களில் அக்கிரமங்கள், முறைகேடான செயல்கள் ஏராளமாக நடைபெறும். ஆனால், நல்ல செயல்கள் நடைபெறுவது மிகவும் கடினமாக இருக்கும். இதைத்தான் யானையே போன வழியில், அதன் வால் போக முடியவில்லை என்று சொல்லி இருக்கிறார்.

அடுத்து மூன்றாவது கேள்வியில்,

பயிர்கள் என்பது மக்களைக்குறிக்கும், பாதுகாக்கும் வேலி என்பது அதிகாரிகளைக் குறிக்கும். அதாவது மக்களைப்பாதுகாக்க வேண்டிய அதிகாரிகளே அவர்களை அழித்து விடுவார்கள். மக்கள்தான் வறுமையில் வாடுவார்களே தவிர, அதிகாரிகள் செழிப்பாகத்தான் இருப்பார்கள்.

இதைத்தான், வேலி அப்படியே இருக்க, பயிர்கள் எப்படி அழிந்தன என்ற கேள்வி குறிப்பிடுகிறது என்று சொல்லி முடித்தார் தர்மர்.

கலியுகத்தில் உலகம் இப்படித்தான் இருக்கும் என்பது மகாபாரத காலத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

# கல்விக்கதிர்



- அகரன் -

## பாவேந்தர் பாரதிதாசன்

பாரதிதாசன் (Bharathidasan, ஏப்ரல் 29, 1891 – ஏப்ரல் 21, 1964) பாண்டிச்சேரியில் (புதுச்சேரியில்) பிறந்து பெரும் புகழ் படைத்த பாவலர் ஆவார். இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம் ஆகும். தமிழாசிரியராக பணியாற்றிய இவர், சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் 'புரட்சிக் கவிஞர்' என்றும் 'பாவேந்தர்' என்றும் பரவலாக அழைக்கப்படுபவர்.



இவர் குயில் என்னும் கவிதை வடிவில் ஒரு திங்களிதழை நடத்தி வந்தார்.

பிறப்பு – ஏப்ரல் 29, 1891
புதுவை, இந்தியா
இறப்பு – ஏப்ரல் 21, 1964
(அகவை 72)
சென்னை
புனைப்பெயர் – பாரதிதாசன்
தொழில் – தமிழாசிரியர், கவி ஞர், அரசியல்வாதி
நாடு – இந்தியர்
இனம் – தமிழர்
கல்வி – புலவர்
கல்வி நிலையம் – கல்வே கல்லூரி, புதுவை
எழுதிய காலம் – 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்
இலக்கிய வகை – தமிழிலக்கியம் – கவிதை, நாடகம், கட்டுரை, கதை
கருப்பொருட்கள்
இனமானம், அரசியல்
இயக்கம் – திராவிட இயக்கம்
குறிப்பிடத்தக்கபடைப்பு(கள்) – பாண்டியன் பரிசு
குறிப்பிடத்தக்கவிருது(கள்) – சாகித்திய அகாடமி விருது
துணைவர் – பழநி அம்மையார்
பிள்ளைகள் – சரசுவதி.கண்ணப்பன், வசந்தா.தண்டபாணி இரமணி.

## மாமன், சித்தி எப்படி வந்தார்கள்?



மொழியில் பல்லாயிரக்கணக்கான சொற்கள் இருக்கின்றன. அவற்றில் சில ஆயிரம் சொற்களையே நாம் அறிந்திருப்போம். அறிந்தவற்றில் சில நூறு சொற்களைத்தாம் நாம் நாள்தோறும் பயன்படுத்துகிறோம்.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் சொற்கள் சில வகைகளில் அடங்கிவிடும். அவற்றில் உறவுப்பெயர்ச்சொற்களுக்குக் கட்டாய இடமுண்டு. 'அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, மாமா' என்று அழைக்காத நாள் உண்டா ? இல்லை எனலாம்.

உறவு முறைச் சொற்களை நாம் அன்றாடம் பயன்படுத்துகிறோம். உறவுப் பெயர்களில் முதன்மையானவை தாயும் தந்தையும். ஆனால், நாம் வீட்டில் தாயே, தந்தையே என்று அழைப்பதில்லை. எழுத்தில்தான் தாயே, தந்தையே என்று பயன்படுத்துகிறோம்.

அழைப்பதற்கென்று தனிச்சொற்கள் உள்ளன. அவை அம்மா, அப்பா !

அம்மை அல்லது அம்மாள் என்பதுதான் அம்மா என்ற சொல்லின் வடிவம். அப்பன் அல்லது தகப்பன் என்பதுதான் அப்பா என்ற சொல்லின் திருத்தமான வடிவம்.

அம்மாள் என்ற பெண்ணின் உடன் பிறந்த ஆண் நமக்கு என்ன உறவு ? தாயுடன் பிறந்தவர் என்பதால் அவரும் நமக்கு இன்னொரு தாய்தானே? அதனால் அம்மாள் என்ற சொல்லின் ஆண்பால்தான் அவர்க்குப் பெயரானது. அம்மான்! அந்த அம்மான் என்ற சொல்தான் மாமன் என்று மருவிற்று. அதனால் அவரை நாம் 'மாமா' என்று அழைக்கிறோம்.

தமக்குப் பின் வந்தவன், தம் பின்னவன், தம்பின் என்பதுதான் தம்பி ஆயிற்று.

ஐயன் என்ற சொல்லுக்கு மூத்தவன் என்ற பொருள் உண்டு. தம் ஐயன் தமையன். இன்னொரு சொல் அண்ணன் என்பது. அண்ணா, அண்ணே என்று அழைக்கிறோம்.

தமக்கு மூத்ததாகப் பிறந்த பெண் தம் அக்கை, தமக்கை. அக்கை என்பதைத்தான் 'அக்கா' என்று அழைக்கிறோம். தம் பின் பிறந்த பெண் தங்கை. அதுவே தங்கச்சி.

கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட பானைகளில் ஆதன் என்ற பெயர் பொறிக்கப்பட்டு இருந்தது. ஆதன் என்ற சொல்லோடு தொடர்புடையதுதான் ஆத்தன், ஆத்தள், ஆத்தாள், தாதன், தாத்தன் போன்றவை. தாலாட்டுப் பாட்டு பாடிய மூத்த தாய் பாட்டி.

சிறிய தகப்பன் சிற்றப்பன். பேச்சு வழக்கில் சித்தப்பன், சித்தப்பா என்று மருவிற்று. பெண்பாலை உணர்த்த ஒரு சொல்லோடு இ என்ற விகுதியை இறுதியில் சேர்த்தால் போதும். சிறு + இ = சிற்றி. சிற்றி என்ற சொல்தான் பேச்சு வழக்கில் சித்தி என்று மாறியது.

## - நூல் விமர்சனம் -

# கனடா ஸ்ரீ ரஞ்சனியின் 'ஒன்றே வேறே' சிறுகதை நூல்




அவுஸ்திரேலியாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஆதரவில் சிட்னியில் ஐந்து நூல்களின் அறிமுக விழா நவம்பரில் இடம்பெற்றது. மெல்பேர்ண் எழுத்தாளரும் ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் ஸ்தாபகருமான திரு. முருகபூபதி அவர்களின் முயற்சியால் இந்நிகழ்வு இடம்பெற்றது. அந்த நிகழ்வில் ஶ்ரீரஞ்சனியின் ஒன்றே வேறே என்ற சிறுகதைத் தொகுதியை ஆய்வு செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 16 சிறுகதைகள் அடங்கிய இந்த நூல் வாசிக்கும்போது மிகவும் சுவாரசியமாக இருந்தது. கற்பனையும் யதார்த்தமும் கலந்து எழுதியிருப்பதால் கதைகளை தொடாந்து வாசிக்க வேண்டும் என்ற ஓர் தூண்டுதல் இருந்து கொண்டிருந்தது.

இந்தச் சிறுகதைக்கு ஏன் இந்தப் பெயரை வைத்தார் என்ற காரணத்தைத் தேடிப்பார்த்த போது ஒன்றே வேறே என்று தொல்காப்பியரின் ஒரு பாடல்தான் கண்ணில் பட்டது. எனக்கு தொல்காப்பியர் மற்றும் அவரின் தத்துவங்கள் குறித்த பரிச்சயம் அதிகம் இல்லை. அந்தப் பக்கத்தை ஒய்வு பெற்றபின் திறக்கலாம் என்று யோசித்திருக்கிறேன். ஆனாலும் தேவை கருதி ஒரு கையேடாக அதை வாசித்துப்பார்த்தேன்.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை யின்றே

இதுதான் அந்தப் பாடல். இந்த சிக்கலான பாடலின் முழுமைக்குள் நான் செல்லவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் புரிந்தது. ஒன்றுபடுவதற்கும் வேறுபடுவதற்கும் விதியை நொந்து கொள்ளச் சொல்லியிருக்கிறார் தொல்காப்பியர். ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப அதாவது ஒத்த சிந்தனையுள்ள ஒரு ஆணும் பெண்ணும் சந்தித்துக் கொள்வதில் அல்லது காதல் கொள்வதில் ஊழின் பங்கு அல்லது விதியின் பங்கு எவ்வளவு முக்கியம் என்கிறது. இங்கே பால் என்பது ஊழ் அதாவது விதி. ஊழது ஆணையின் என்று அங்கு அழுத்திச் சொல்லப்படுகிறது. ஆனால் ரீரஞ்சனி சொல்லியிருக்கிற ஒன்றே வேறே என்பதற்கு வேறு பல காரணங்கள் இருக்கிறது என்பதை அவரது கதைகளை வாசித்தபோது அறிந்து கொண்டேன்.

ஶ்ரீரஞ்சனியின் கதைகளுக்குள் பெண்கள் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் முக்கியமான பிரச்சனைகளின் வடிவங்கள் பேசப்பட்டிருக்கின்றன. அந்த கதைகளில் வாழுகின்ற முகங்களின் மூலம், அந்த முகங்கள் பிரதிபலிக்கும் உணர்வுகள் மூலம், அந்த முகங்கள் பிரதிபலிக்கும் வாழ்க்கையின் பதிவுகள் மூலம் பெண்களின் மனநிலையை வெளிப்படுத்த முயன்றிருக்கின்றார். அவரது கதைக்குள் நிறைய கதைமாந்தர்கள் இல்லை, ஆக கதை நாயகி மற்றும் கதை நிகழும் காலத்தில் அவளைச்சுற்றி உள்ளவர்கள் அவ்வளவுதான். அந்தளவுக்கு எளிமையான, அதிக கற்பனை வீச்சு இல்லாத யதார்த்தைச் சித்தரிப்பதாக இருக்கின்றது ஒவ்வொரு கதைகளும். கதைகளின் மொழிநடையும், கதைகளைக் கூறும் விதமும் மிக வித்தியாசமாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது அப்பெண்ணின் வாழ்க்கையை முழுமையாகச் சித்தரிக்காமல் அவளது அன்றாட வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு தருணத்தின் உள்ளடுக்குகளை எடுத்து அவைபற்றிப் பேசுகிறார்.

ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பதிவுகள் என்றுகூட இந்த நூலுக்குப் பெயர் வைத்திருக்கலாம். அவ்வளவு பொருத்தமாக இருந்திருக்கும். சில கதைகளில் கூறப்பட்ட விடயம் முன்னரே வேறு சிலரால் எழுதப்பட்டிருக்கலாம் ஆனாலும் ஶ்ரீ ரஞ்சனியின் எழுத்து அவற்றை வேறு கோணத்தில் சிந்திக்க வைக்கிறது. ஏற்கனவே சொல்லப்பட்ட ஒரு விடயத்தை வேறு கோணத்தில் காட்டியிருக்கிறார் அல்லவா அதாவது ஒன்றே ஆனால் வேறே, இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் இவர் இந்த நூலுக்கு ஒன்றே வேறே என்று பெயர் வைத்தமைக்கு.

சரி நான் இப்போது இந்த நூலில் உள்ள சில கதைகளைப்பற்றிய எனது விமர்சனத்தை முன்வைக்கிறேன். நான் இப்போ விமர்சிக்கப் போகும் கதைகள்தான் சிறந்தவை என்றில்லை ஏனென்றால் நான் இவற்றை ஏதேச்சையாகத் தான் தேர்ந்தெடுத்துள்ளேன்.

சேணமற்ற அவசரம்: குதிரைக்குச் சேணம் இல்லையென்றால் என்னாகும்? நாலாபுறமும், குதிரை தன் பார்வையைத் திருப்பி, சவாரி செய்பவரை, சாக்கடையில் தள்ளிவிடும். அதேபோலத் தான் ஆனுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஏற்படுகின்ற உறவை அவசர அவசரமாக நாங்கள் தீர்மானித்து விடுகிறோம். அது நட்பாக மாற வாய்ப்பிருக்கிறது, காதலாக மாற வாய்ப்பிருக்கிறது இல்லை இரகசியத் தொடர்பாக நிலைக்கவும் வாய்ப்பிருக்கிறது. இந்தக் கதையிலும் நீண்ட பழக்கத்தின்பின் ஆண் தனது உறவு நட்பென்கிறான் ஆனால் பெண் அதைக் காதல் என்று எண்ணிவிடுகிறாள். அதுமட்டுமல்ல அவள் அந்த உறவுக்குள் சிறைப்பட்டுக் கிடக்கிறாள். அதே சமயம் நட்பு என்று சொல்லுகின்ற அந்த ஆணோ அவளது நேசத்தை புரிந்து கொள்ளத் தெரியாமல் அதற்குரிய மதிப்பையும் மரியாதையையும் சரிவரக் கொடுக்கத் தெரியாமல் தன்நலம் கருதி செயல்படுகின்றான்.

மேலான உறவுகளை சமநிலையான கொடுக்கல் வாங்கலால் மட்டுமே உருவாக்கிக் கொள்ள முடியும். வெறும் கற்பனைகள், நெகிழ்வுகள் மூலம் உண்மையான உறவுகளை ஒருபோதும் உருவாக்கிக்கொள்ள முடியாது என்பதை இந்த கதை அடித்துக் கூறுகிறது. உறவு என்பது முன்னகர்ந்து செல்லக்கூடிய வாய்ப்புக்களைத் தர வேண்டுமே தவிர உணர்வு சார்ந்து எங்களை கீழே இழுக்கின்ற அல்லது விழுத்துகின்ற உறவாக இருக்கக் கூடாது.

இந்தக் கதை பேசுகின்ற உறவு அந்தப் பெண்ணுக்க ஒரு பாரமான பொருளை தூக்கிக்கொண்டு நடப்பதுபோல் கடினமாக இருக்கிறது. அப்படிப்பட்ட உறவுகளில் இருந்து விலகிவிட வேண்டும். வாழ்க்கை என்பது எப்போதும் எங்களுக்கு முன்பக்கம்தான் இருக்கிறது. ஆகவே வாழ்க்கையின் எச்சங்களை பின்னோக்கித் தள்ளிவிட்டு முன்னோக்கிச் செல்லவேண்டும் என்பதை தெளிவுபடுத்துகிறது இந்தக் கதை.

வெளிப்படைத் தன்மையற்ற உறவுக்குள் சிக்கி ஏன் அந்தப் பெண் தன் துயரங்களை மிகைப்படுத்த வேண்டும். ஒரு உறவினால் ஏற்படும் இழப்பை தெளிவாக உணர்ந்து கொண்டும் அதற்குள் கிடந்து வருந்திக் கொண்டிருப்பது எவ்வளவு மடைமை என்பதை இந்தக் கதை கூறுகிறது.அது நட்பாக இருந்தாலும் சரி, திருமணமாக இருந்தாலும் சரி.

இன்றைய தொழில் நுட்ப யுகத்தில் சிறியவர் முதல் பெரியவர் வரை இந்தக் கதையை வாசிக்க வேண்டும். மனைவிக்குத் தெரியாமல் ஒளித்தொழித்து எங்கோ தெரியாத நாட்டில் யாரென்றே தெரியாத பெண்ணுடன் இராப்பகலாகப் பேசுவதும், உருப்படியாக எதுவுமே செய்யத் தெரியாமல் சும்மா good morning, good night message போடுபவர்களுக்கும், அவர்களின் அர்த்தமற்ற messages ற்காகவும் பொருளற்ற உரையாடலுக்காகவும் தவம் கிடக்கும் பெண்களுக்கும் இந்தக் கதை ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும், ஏற்படுத்த வேண்டும்.

நிழல் ஒன்று – கதையின் நாயகி சாதாரண ஆசைகள் நிரம்பிய ஓர் பெண். அவளின் குடும்பத்தில் ஏற்படுகின்ற நெருக்கடிகள் அவளது அன்றாட நிகழ்வுகளை வெகுவாகப் பாதிக்கிறது. அப்போது அவளது நண்பன் ஒருவன் அவளைப் புரிந்து கொண்டு அவளுக்கு உதவிசெய்கிறான்.

இந்தக் கதையில் பெண்களின் மீது கட்டவிழ்த்து விடப்படும் கண்ணுக்கு தெரியாத வன்முறைகள் வெளிச்சமிட்டு காட்டப்படுகிறது. இதில் கூறப்பட்ட கருத்து உண்மையில் வியக்க வைக்கிறது.

குடும்பங்களுக்குள் ஏற்படுகின்ற வன்முறை என்பது ஒருவகை இயலாமையில் இருந்தே வருகிறதென உணரவைக்கிறது.

பலமானவர்கள் ஒருபோதும் வன்முறையில் ஈடுவதில்லை, பல்வேறுவகையான அழுத்தி வைக்கப்பட்ட உணர்வுகள்தான் வசைகளாகவும் வன்முறையாகவும் வெளிவருகின்றன என்பதை இக்கதை வெளிப்படுத்துகிறது. அப்படிப்பட்ட சூழலில் வசிக்கின்ற ஒரு பெண்ணினால் எப்படி ஓர் சமநிலையான வாழ்க்கையை வாழ முடியும். ஓர் ஆரோக்கியமான விவாதமோ, மறுப்போ அங்கே நிகழமுடியாது அதையும்மீறி அப்படி ஏதாவது இடம் பெற்றால் அவை சமூக மீறல்களாகவே பார்க்கப்படுகின்றன.

அவளுடைய சொந்தம் அவளை துன்பறுத்தும் போது யாரோ ஒருவன் நிழல் கொடுக்கின்றான் அல்லவா. அவளுடைய கஷ்டத்தில் பங்கெடுத்து அவளுக்கு கை கொடுத்து உதவுகின்றான் அல்லவா. அவன்தான் அவளைப் புரிந்து வைத்துள்ள நண்பன். யாராக இருந்தாலும் ஒரு மனிதன் செய்யும் செயல்களால்தான் அவனது சிறப்புகள் வேறுபடுகின்றன என்பதை இந்தக் கதை கூறுகிறது.

சங்கர்; இந்தக் கதையின் கருப்பொருள், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவது, மது போதையில் மனைவியை அடிப்பது அவ்வளவுதான். ஆனால் அதை நான் கூறுவதுபோல் வெறும் கூற்றாகக் கூறாமல் இலக்கியமும் புனைவும் கலந்து கூறியிருக்கிறார்.

தன் கணவன் தன்னை நடத்தும் விதத்தினால் ஒவ்வொரு நிலையிலும் சிறுமைப்பட்டுப் போகும் பெண், ஒரு கட்டத்தில் தன் உள்ளுணர்வால் உந்தப்பட்டு எதிர்வினையாற்றத் துணிகிறாள். அதற்கான செயற்பாடுகளில் இறங்கும் போது அவளால் சில மாற்றங்களையும் அங்கே சாதிக்க முடிகிறது என்பதை வெளிப்படுத்துகிறது இந்தக் கதை.

பொதுவாகவே ஒரு பெண் தனது கணவனுக்கு எதிராகச் சட்ட ரீதியாக செல்லும்போது அவற்றைத் திரும்பப் பெறும்படி பலவிதத்திலும் பலரும் அழுத்தம் கொடுப்பார்கள். அந்த வழக்கை திரும்பப் பெறாவிட்டால் தான் தற்கொலை செய்து கொண்டுவிடுவேன் என்று கணவனும் கூறுவான், பெண்ணும் இவற்றை எல்லாம் கேட்டு உடைந்துபோய், வேறு வழியில்லாமல் வழக்கையும் திருப்ப பெற்றுக் கொள்வாள். இது தான் யதார்த்தம். சமூகச் சீர்கேடுகளை எதிர்த்துப் போராடும் எந்த ஓர் பெண்ணும் இறுதியில் அந்த சீர்கேடுகளிற்கே அடி பணிந்து போவதுதான் எழுதாத விதி.

ஆனால் இந்தக் கதை அப்படியான ஓர் பெண்ணைக் காட்டவில்லை. வெறும் உணர்வுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்காத ஓர் துணிவுள்ள பெண்ணாகவும் தான் வாழும் சூழலில் தனக்கு ஏற்படும் சிறுமைகளின்போது ஒரு பெண் எவ்வாறு செயல்பட வேண்டும், எவ்வாறு மாற்றங்களை உருவாக்கவேண்டும் என்பதையும் அழகாக ஆழமாக இக்கதையினூடாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஒன்றே வேறே: இத்தொகுப்பில் உள்ள ஏறத்தாழ அத்தனை கதைகளுமே எனக்குப் பிடித்திருத்தாலும் இந்தக் கதை என்னை நிறையவே சிந்திக்க வைத்தது. கதையில் உச்சமாக பெண்ணின் மார்பை மட்டுமே எடுத்து விரிந்து செல்கிறது கதைக்களம். எத்துணை மகிமைகளை வெளிப்படுத்திய ஓர் பெண்ணின் மார்பு நோயினால் பீடிக்கப்பட்டபின்பு அந்தப் பெண் ஓர் இருட்டுக்குள் மூழ்கி அந்த இருட்டுக்குள்ளிருந்து வெளியேவரத் துடிக்கின்ற ஓர் யுத்தம்தான் இந்தக் கதை. ஒரு 90 வயதுப் பாட்டியின் வார்த்தைகள் அந்தப் பெண்ணுக்குள் ஒரு வித பேரமைதியையும், நிதானத்தையும் ஏற்படுத்துகிறது. இதை வாசித்தபோது எங்கள் அம்மா அப்பா தாத்தா பாட்டி இவர்களின் அருகாமையை இழந்த நாங்கள் எவ்வளவு துர்ரதிர்சடசாலிகள் என்பதையும் உணரச்செய்தது.

ஒன்றே வேறே என்ற பெயரைச் சூட்டியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அதாவது பெண்ணின் மார்பு என்பது ஒன்றே ஆனால் அவற்றிற்குள் எத்தனை வேறு வேறான மகிமைகள் உள்ளன. உடலில் உள்ள மாற்றத்தை உணர வைக்கிறது, உயிர் வாழ உணவை ஊட்டுகிறது, உடல் இன்பத்தை ஊக்குவிக்கிறது, இறுதியில் அந்த மார்பை வெட்டி எடுத்துவிட்டால் கூட அந்த உயிர் வாழமுடிகிறது. ஆக அந்த ஒன்றே வேறு வேறு விதமாக வேறாக நிகழ்கிறது. ஒன்றே ஆனால் வேறே.

உடல் என்பது ஓர் ஊடகம் மட்டுமே. உடலில் எதுவுமே தங்குவதில்லை. பழிகள், தீமைகள், நன்மைகள் எதுவுமே உடலில் தங்குவதில்லை ஆன்மாதான் காவுகின்றது என்று கூறுகிறார்கள். சிலரைப் பார்த்திருக்கிறேன். உணவுக் கட்டுப்பாடு, மருந்து, இப்படிச் செய் அப்படிச் செய் என்று ஆரம்பித்து நான்கு மணிநேரம் அதைப்பற்றியே தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். இவையெல்லாம் வெறும் உடலுக்கான போராட்டமாகத்தான் எனக்குப் படுகிறது. உடலைச் சீரழிக்கக் கூடாது என்பதில் உள்ள அக்கறையை ரீரஞ்சனி இந்தக் கதையில் அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார். உடலைப் சரியாகத்தானே பேணினேன் அதில் எந்த ஓர் குற்றவுணர்வும் எனக்கு இல்லையே ஆனால் ஏன் இந்த நோய் எனக்கு ஏற்பட்டது என்ற கேள்வியையும் அவர் கேட்கிறார்.

என்னை மீறி ஒரு நோய் வந்துவிட்டது அதற்காக அந்த நோயை ஒரு பாரமாகச் சுமந்து கொண்டிருப்பதாலோ, அதைப்பற்றிச் சிந்தித்து சிந்தித்து எங்களது சக்தியை விரயமாக்குவதாலோ ஒன்றுமே நிகழப்போவதில்லை. நாம் வாழப்போகும் காலங்கள் வரையறுக்கப்படவில்லை ஆனால் வாழும் காலங்கள், பலவற்றை அறிவதற்கும், அறிந்தவற்றை உணர்வதற்கும், உணர்ந்தவற்றைப் பகிர்ந்து அதனடிப்படையில் முழுமை நோக்கிச் செல்வதற்குமே கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஓர் மாபெரும் ஆற்றலை கவலையில் செலவழிப்பது பாரிய வீணடிப்பு அல்லவா. இதுவரை அப்படி அசட்டுத்தனமாக வீணடித்தால் வீணடித்த அந்த நாட்களுக்காக நாம் குற்றவுணர்ச்சி கொள்ளவேண்டும் அல்லவா. பொதுவாகவே நாட்களை இழந்தால் நாம் திரும்ப பெற முடியாது. அதிலும் இளமையின் நாட்கள் பல மடங்கு ஆற்றல்கொண்டவை, பலமடங்கு பெறுமதியானவை. அவற்றை சரியாகப் பயன்படுத்துவோம் என்பதைத்தான் இக் கதை கூறுகிறது.

இப்படியாக இவரது நூலில் உள்ள அனைத்துக் கதைகளும் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பேசுகின்றன. முற்றிலும் சம்பந்தமில்லாத விடயங்களை வெறும் வார்த்தைகளாகப் பேசி சலிப்பூட்டவில்லை. கதை முழுக்க உணர்ச்சி உயரங்கள் கையாளப்பட்டு நுண்ணிய சித்தரிப்புகளால் எழுதப்பட்டிருக்கிறது. கதையின் ஓட்டத்திற்காகவும், இயற்கை அழகை காட்சிப்படுத்துவதற்காகவும் இந்த நூல் முழுக்க உவமைகள் கொட்டிக் கிடக்கின்றன. இந்த நூலின் அட்டைப்படம் மிக அழகானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறது. எப்படி அந்த ஓவியத்தை மகுடம் பதிப்பகத்தார் தேர்வு செய்தார்களோ என்று தெரியவில்லை. வாழ்த்துக்கள்.

பெண்கள் திரும்பத்திரும்ப குடும்பப் பிரச்சினைகளைத்தான் எழுதுகிறார்கள் அவர்கள் ஒரு சின்ன வட்டத்துக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று சிலர் கூறுவார்கள், அவர்கள் அந்த வட்டத்தைவிட்டு வெளியே வந்து கனகாலமாகி விட்டது, அவர்கள் எந்த உலகை அழித்து எந்த உலகத்தை உருவாக்க முயல்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

எம்மைச் சுற்றியுள்ள மனிதனை எழுதாத, எமது மண்ணை எழுதாத, எமது வாழ்வை எழுதாத எழுத்து எதற்கென்று எனக்கு அடிக்கடி தோன்றும். அதனாலோ என்னவோ, சக மனிதர்களை அவர்களது மனங்களை எழுத்தில் கொண்டு வரும் எழுத்தாளர்களின்மீது எனக்கு அதீத ஈர்ப்பு ஏற்படுவதுண்டு. பொதுவாகவே படைப்பாளிக்கு எந்த ஓர் ஆழமான அனுபவமும் ஒரு பேசுபொருள்தான். அந்த வகையில் நூலாசிரியரும் மனிதர்களைப்பற்றி இன்னும் நிறையப் பேசவேண்டும்.

பெண்களே உங்களுக்கு, சலுகையோ, அனுதாபமோ, கரிசனமோ எதுவுமே தேவையில்லை ஆனால் பெரிதாகக் கனவுகாணுங்கள், அந்தக் கனவுகளுக்காக தீவிரமாக முயற்சி செய்யுங்கள் என்பதைத்தான் இந்தக் கதைகள் கூறுகின்றன. முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கு அந்த முட்டையின் கூட்டை உடைக்க ஒரேயொரு வழிதான் இருக்கிறது. தானாக வளர்ந்து தன் சிறகை வளர்ப்பது அதைச் செய்யுங்கள் என்று பெண்களுக்கு கூறியுள்ளார்.

**கவிதாயினி சௌந்தரி கணேசன்**
**(ஆஸ்திரேலியா)**

கனவுக் கதிர்



காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# இயல்பாய் ஏற்படும் எலும்பு தொடர்புடைய குறைபாடுகள்

குறைபாடுகள் வாழ்க்கையின் எந்த நிலையிலும் ஏற்படலாம். இளம்பிள்ளை வாதம் மற்றும் எலும்பில் ஏற்படும் எலும்புருக்கி நோய் குழந்தைகளில் நொண்டி போன்ற விளைவுகளை ஏற்படுத்தி, நீண்ட காலத்திற்கு நீடிக்கச் செய்யும்.

கருமுதலமைவுடைய அல்லது இயல்பாய் ஏற்படும் தசை பாதிப்படைதல், தசையின் ஆற்றல் மிக்க செயல்பாட்டை பாதிக்கும். பாதிப்பின் அளவு, பாதிப்பின் கடுமையை வைத்து தீர்மானிக்கப்படுகிறது.

தண்டுவட காயங்கள் எப்போதுமே உடல் சார்ந்த இயக்கங்களின் ஆற்றலை கட்டுப்படுத்துவதில் பொறுப்பாகிறது.

கை, கால் போன்றவை வெட்டி எடுக்கப்படும் விபத்துக்களின் விளைவாக எலும்பு தவறான வடிவம் பெற்று இருப்பதுடன், செயலாற்ற முடியாத நிலையும் ஏற்படுகிறது.


## எலும்பு சார்ந்த குறைபாடுகளை அளத்தல்

குறைபாட்டின் கருத்தாழத்தை கை, கால்களின் செயல்பாட்டை கொண்டு அளவிடலாம். சில சிறு கை, கால் குறைபாடுகள், ஒரு குழந்தையின் இயக்கத்திற்கு அதிகமான தடைகளை ஏற்படுத்தாது. மற்றொரு வகையில், குறைபாடு மிகவும் கடுமையானதாக, நிலையானதாக இருக்குமானால், குழந்தையின் இயக்கம் மற்றும் சுதந்திரம் மிகவும் அதிகமான அளவில் பாதிப்படையும். எனவே, இது போன்ற நிலைகள் பொருத்துதலில் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

## பாதிக்கப்பட்ட கை, கால் இழந்த குழந்தையின் பண்புகள்

உடல் சார்ந்த குறைபாடுகள் தாழ்வு மனப்பான்மையை இளம் குழந்தைகளிடையே ஏற்படுத்தி விடும். போதும் என்ற நிறைவற்ற உணர்வின் விளைவாக தன் இரக்க (Self Pity) மனப்பான்மை ஏற்படும்.

இது போன்ற குறைபாடுள்ள குழந்தைகள் சுற்றி



யுள்ளவர்களிடம் இருந்து தம்மை தனிமைப்படுத்திக் கொள்வார்கள். தனியாக தனிமைப்படுத்தப்பட்டு இருப்பது, அவர்கள் சமூகத்தில் தடுமாற்றமுடைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பிரதிபலிக்கப்படுகிறது. இன்னும் சிறிது அதிகப்படியாக வளர்ந்த குழந்தை எப்போதும் உள இயல்பு சார்ந்த அதிர்ச்சியான ஆபத்துக்களை எதிர்கொள்ள நேரும். ஏனெனில், முரண்பாடுகளை கொண்ட பாதிப்படைந்த உறுப்புகளைக் கொண்ட குழந்தைகளின் பேரார்வங்கள் மற்றும் செயலாக்க திறன்களினால் வளர்ந்த குழந்தைகள் அடிக்கடி உள் இயல்பு சார்ந்த அதிர்ச்சி தரும் ஆபத்துக்களை எதிர்கொள்ள நேரிடும்.

கவலை, மிகைப்படியான மனச்சோர்வு, தப்பித்துக் கொள்ளுதல் மற்றும் அதிகமாக வலிய சண்டைக்குச் செல்லுதல் போன்றவற்றை பாதிக்கப்பட்ட மற்றும் உறுப்பு (கை, கால்) இழந்த குழந்தைகளிடையே காணலாம்.


## இழந்த உறுப்புகள் / பாதிக்கப்பட்ட கை, கால் உள்ள குழந்தைகளின் சிறப்பான தேவைகள்

பார்வையற்ற, காது கேளாத குழந்தைகளைப் போல உறுப்பு இழந்து பாதிப்படைந்த குழந்தைகளுக்கு உடல், சமூகம், மனவெழுச்சி மற்றும் கல்வி சார்ந்த சிறப்பான தேவைகள் அவசியமாகின்றன.



உடல் சார்ந்த தேவைகள் என்பது தினசரி செயல்பாடுகளை ஒழுங்கான முறையில் நிறைவேற்றிட உடல் உறுப்புகள் ஒத்துழைக்க வேண்டும். பெற்றோர், குழந்தைக்கு விட அதிகமான அளவிற்கு உதவ வேண்டும் என்ற மனப்பான்மையோடு செயல்பட வேண்டும். குழந்தைகளின் ஊனத்திற்கு தாங்களே காரணம் என்று பெற்றோர்கள் நினைத்துக் கொண்டு எப்போதும் குழந்தைகள் செய்யும் அதிகப்படியான தவறுகளை மன்னிக்கத் தயாராகிவிடுவர்.

காலம் கடந்து செல்லும் போது, குழந்தை உரிமையாக கோரிக்கை விடுக்க ஆரம்பித்து, உதவியை ஏற்றுக்




கொண்டு, பிறகு சுதந்திரமாகவும், தன்னை சார்ந்து நம்பிக்கையுடன் இருப்பதற்கு முயற்சி மேற்கொள்ளாது நிறுத்திவிடும்.

அறிவியல் நுட்பங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் விளைவாக செயற்கையான உறுப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளன. உடல் குறைபாடுகளை கடந்து வருவதற்கு செயற்கை உறுப்புகள் உதவுகின்றன. செயற்கை உறுப்புகள் பார்ப்பதற்கும், உபயோகித்து, செயல்படுத்துவதற்கும் சாதாரண நபர்களைப் போல செயல்பட உதவுகிறது.

உடலியக்கம் சார்ந்த சிகிச்சை (physiotherapy) என்பது ஒரு மருத் துவம் சார்ந்த அறிவியல் ஆகும். இந்த அறிவியல் ஊனமுற்ற குழந் தைக்கு முழு உடல் திறனையும் அதிகப்படியாக வெளிப்படுத்த உதவி செய்கிறது. தனிச்சிறப்பு வாய்ந்த கருவிகளான (caliper) கால், கையில் அழுத்தம் இன்றி நடக்க உதவும் இணைத்துக்கட்டப்பட்ட, வரிச்சல் காலணிகள் (shoes) மற்றும் செயற்கை உறுப்புகளுடன் (கை, கால்) போதுமான, ஒழுங்குமுறையான பயிற்சியும் அளிக்கப்படும் போது மிகச் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தும்.

## சமூக மற்றும் மனவெழுச்சிகளின் தேவைகள்

விளையாட்டு என்பது மிக முக்கியமான சமுதாயம் சார்ந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுவதற்கு வாய்ப்பளிக்கும் கருவியாகும். பாதிக்கப்பட்ட உறுப்பு கொண்ட குழந்தைகள் எப்போதுமே குழு விளையாட்டு செயல்பாடுகளில் இருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். இது போன்ற வேறுபாடுகளை கண்டறியும் போது சமுதாயம் சார்ந்த செயல்பாடுகளை பாதிப்படையச் செய்யும். குழந்தையானது அதிகமாக மனச் சோர்வுடன், வாட்டத்துடன் ஒதுக்கப்பட்டு இருக்கும். 'நொண்டியான உடலில், செயலிழந்த மனநிலை இருக்கும்' என்ற மூடநம்பிக்கையுடன் உள்ள சமூகத்தின் மனப்பான்மை, பாதிக்கப்பட்ட ஊனமான உறுப்புகளை கொண்ட குழந்தைக்கு தவறான சுய எண்ணத்தை ஏற்படுத்தி விடும்.

அதிகப்படியாக வலுச்சண்டையிடுதல் மற்றும் கடுங்கோபத்தை திடீரென வெளிப்படுத்துதல் போன்ற குணங்கள் பொதுவாக கை, கால் ஊனமுற்ற குழந்தைகளிடையே காணப்படுகிறது. அன்புடன் பராமரித்தல் மற்றும் ஒழுங்கு முறையான பயிற்சி ஆகியன சுதந்திரமாக, தன்னையே சார்ந்து இருக்கும் நிலையை உருவாக்குதல் போன்றவைகள் ஊனமுற்ற குழந்தைகளின் அடிப்படைத் தேவைகள் ஆகும்.

## கல்வி தேவைகள்

இதில் செய்தல், எழுதுதல், விளையாட்டு, வரைதல், வண்ணம் தீட்டுதல், பின்னுதல் மற்றும் நடனம் ஆடுதல் போன்ற சில செயல்பாடுகள், கல்வி தேவையில் சேர்க்கப்பட்டு, ஊனமுற்ற குழந்தைகளை அவற்றில் ஈடுபடச் செய்து செயல்பட வைக்கிறது.

## குழந்தைகளிடம் ஏற்படும் சமூக எதிர்மறையான விளைவுகளுக்கான காரணங்கள்

சமூகத்தால் பாதிப்படைந்து ஊனமுற்ற குழந்தைகள், சமூகத்தில் தங்களுக்கென ஒரு இடத்தை பெறுவதற்கு மிகவும் கஷ்டப்படுவார்கள். இக்குழந்தைகள், அவர்களை ஒத்த வயதுள்ள சாதாரண குழந்தைகளைப் போன்று நடந்து கொள்வதில்லை. இக்குழந்தைகள் சமூகவிரோத செயல்களான திருடுதல், பிக்பாக்கெட் அடிப்பது, சீட்டு விளையாடுதல், மது மற்றும் போதைப் பழக்கத்திற்கும் அடிமையாகி இருப்பார்கள். இன்னும் சிலர் குற்றங்கள் பல புரிந்து அசாதாரண பாலியல் மற்றும் பல் வேறுபட்ட நடவடிக்கைகளிலும் பல வேறுபட்ட காரணங்களுக்கு சமூக பாதிப்புக்கும் உள்ளாகின்றனர்.

## முறிவுப்பட்ட குடும்பங்கள்

பெற்றோர்களுக்கிடையே தொடர்ந்து சண்டை சச்சரவுகள் இருக்கும் நிலையில், குழந்தைகள் குடும்பத்தில் இருந்து வெளி வந்து விடுவர். குழந்தைகளுக்குத் தேவையான அன்பும், பாசமும், வழிகாட்டுதல்களும் கிடைக்காமல் போகின்றது. குழந்தைகளுக்கு சில நேரங்களில் போதுமான அன்பு கிடைக்காமல் போய் விடுவதுடன், உயிர் வாழ்வதற்கு தெருக்களில் அலையும் நிர்பந்தமும் ஏற்பட்டு விடுகிறது. தேவையற்ற குழந்தைகளும், அனாதைகளும், சமூகத்தில் பொருந்திக் கொள்ள முடியாத நிலைக்கு ஆளாகின்றனர்.

## வறுமை மற்றும் அறியாமை

மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகள் மற்றும் அறியாமை நிலையில் உள்ள பெற்றோரின் குழந்தைகளுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்றவை இல்லாத நிலை ஏற்படு கிறது. பெற்றோரிடம் இருந்து ஒழுங்கு முறையான வழிகாட்டுதல் இல்லாமையால் இக்குழந்தைகள், சிறிய திருட்டுக்களில் ஈடுபட ஆரம்பித்து தங்கள் வாழ்க் கைக்கு வழி தேடிக் கொள்கின்றனர். இப்பழக்கம் வளர்ந்து நாளடைவில் பெரிய அளவு சமூக விரோத செயல்பாடுகளில் ஈடுபட வைத்து விடுகிறது.

சக்கர நாற்காலிகள் பயன்படுத்துவதால் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு நகர்ந்து செல்வதில் முன்னேற்றம் ஏற்படுவதுடன் தன்னம்பிக்கையும் வளரும். நீங்கள் எப்போதாவது கை இழந்த குழந்தையை பார்த்துள்ளீர்களா? அக்குழந்தைகள் கால் / வாயின் துணை கொண்டு அழகிய வர்ணங்கள் தீட்டுவதில் சிறந்து விளங்குவது அறியப்படுகிறது. இக்குழந்தைகளின் சுற்றுச் சூழ்நிலையை சிறப்பானதாக அமைக்க வேண்டும்.

## பள்ளிக்குச் செல்லாமை, போதுமான கல்வியின்மை

வாழ்க்கையின் மதிப்பைப் பற்றி குழந்தைகள் அறிந்து கொள்வதில் பள்ளி இரண்டாம் இடத்தை வகிக்கிறது. எது முதல் இடத்தை வகிக்கின்றது என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா? ஆம், வீடு. ஏழ்மையில் உள்ள பெற்றோர் குழந்தைகளை பொருளாதார பற்றாக்

தொடர்ச்சி மறுபக்கம் Q

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir



குறையின் காரணமாக பள்ளிக்கு அனுப்புவதில்லை. இக்குழந்தைகள் சரியான வழிகாட்டுதல் இன்றி தெருக்களில் நீண்ட நேரங்கள் இருக்கின்றனர். மேலும், குழந்தைகள் கூட்டுச் சண்டைகளிலும், விரும்பத்தகாத செயல்பாடுகளிலும் அடிக்கடி ஈடுபடுகின்றனர். பள்ளியில் கற்றுத் தரப்படும் கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றின் குறைவால் விபரீதமான விளைவுகள் ஏற்படுகின்றன. உறுதி வாய்ந்த சாதாரண மற்றும் சமூக மதிப்புகளை அவர்களை சார்ந்த சூழ்நிலையிலுள்ள பெற்றோர், ஆசிரியர் மற்றும் பிற நடுவயதைச் சார்ந்தவர்களிடம் இருந்து பெற முடியாமல் போகும் போது, உடன் இருக்கும் சக வயதினரின் அழுத்தத்தின் காரணமாக எதிர்மறை பண்பினைப் பெற்று ஆற்றல் இழந்து விடுவர்.

## நல்ல பங்கினை வகிக்கும் மாதிரிகள் இல்லாமை

குழந்தைகளுக்கு மிகவும் நுண்ணிய விஷயங்களை பதிவு செய்து காட்டக் கூடிய உணர்வு மிகுந்து இருப்பதால், உடனடியாக தங்கள் சூழ்நிலையில் உள்ள பெரியவர்களிடம் இருந்து கற்றுக் கொள்கின்றனர். கை கூலி வாங்கும் இயல்புடைய மற்றும் நேர்மையற்ற நபர்கள் எதிர்மறை மதிப்புகளை குழந்தைகளிடம் உருவாக்குவார்கள்.

அக்குழந்தைகள் சில செயல்பாடுகளில் சரியானவை மற்றும் தவறானவைகளுக்கு வித்தியாசம் கண்டுணர முடியாமல் தோல்வி அடைவர். நீதிநெறி முறைகள் அதன் மதிப்புகள் குறித்து முற்காலத்தில் கற்றுக் கொடுத்தது போல் தற்போது கற்றுத் தரப்படுவதில்லை. குழந்தைகள் வீட்டில் உள்ள பெரியவர்கள் மற்றும் உடன்பிறந்தவர்களிடம் இருந்து நீதிநெறி முறை மதிப்புகளை மனதில் வாங்கிக் கொள்வார்கள். தவறான நபர்களை பங்கு மாதிரிகளாக, குழந்தைகள் நினைக்கும் போது பிரச்சினைகள் உருவாகின்றன.

## வளரும் காலங்களில் மேற்பார்வை இல்லாமை

இது ஏழ்மை மற்றும் பண வசதி நிறைந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளிடத்தில் ஏற்படலாம். ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர் தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு நீண்ட நேரத்திற்கு உழைக்க நேரிடுகிறது. ஆனால் பண வசதி படைத்தோர், குழந்தை வளருகையில் தவறைக் காணத் தவறுதல்/கவனியாது புறக்கணித்து, தாங்கள் பணக்காரர் ஆகும் ஆசையை மட்டுமே கொண்டிருப்பர். இது போன்ற பெற்றோர் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை வீட்டு வேலையாட்களிடம் விட்டு விடுவர். குழந்தைகளை வளர்ப்பதற்கு பெற்றோர் ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும்.


முக்கியமாக வளரும் காலங்களில் நல்ல ஆரோக்கியமான குழந்தையை உருவாக்குவதற்கு பெற்றோர் தங்களது மதிப்புமிக்க நேரத்தை செலவிட வேண்டும்.

## பாதிக்கப்பட்ட குழந்தை கற்பதற்கும் தன்னையே சார்ந்து இருப்பதற்கும் உதவும் வழிமுறைகள்

ஊனமுடைய, குறைபாடுள்ள குழந்தைகள் கட்டுப்பாடுகள் இருப்பினும் கற்கின்றனர். ஒரு சாதாரணக் குழந்தையால் எளிதாக கற்க முடிவதை, ஊனமுற்ற குழந்தையானது, கடின உழைப்பு, பயிற்சி மற்றும் மிகுந்த மன உறுதியுடன் கற்கிறது. அனைத்து நிலையிலும் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற குழந்தையானது, சாதாரண குழந்தையைப் போன்று வளர்ந்து உருவாகும் உரிமையைப் பெற்றுள்ளன. இருந்தாலும், இச்சிறப்பு வாய்ந்த குழந்தைகள் 'மாறுபட்ட திறனுடைய நபர்கள்' என்று குறிப்பிடப்படுகின்றனர்.

காலம் மாறிவிட்டது; அன்பு செலுத்தப்பட வேண்டியதன் அவசியம், போதுமான சுதந்திரம் அளிக்கும் உணர்வு, மற்றும் சாதாரண குழந்தையைப் போன்று இருப்பதற்கான பயிற்சியை பாதிக்கப்பட்ட ஊனமுற்ற குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும் என்பது போன்ற அதிகப்படியான விழிப்புணர்வு ஊனமுற்ற/பாதிக்கப்பட்ட குழந்தைக்கு ஏதாவது ஒரு குறிப்பிட்ட வகையில் தனி கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினையும் உள்ளது.

பல்வேறுபட்ட வகைகளில் பாதிப்படைந்த குழந்தைகளுக்கு உதவும் முறைகளின் பட்டியல் கீழே கொடுக்






கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பாதிப்பை கையாள வேண்டிய முறையினை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

அதிகமான அன்பும், பாசமும் மற்றும் பெற்றோரின் ஆதரவும் இன்றியமையாதது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சிறப்பு கல்வியாளர்கள், பெற்றோர்/உடன்பிறந்தோர் மற்றும் நண்பர்களின் முறையான வழிகாட்டுதல். சிறப்பான கவனம் தேவைப்படும் குழந்தையுடன் தொடர்பு கொள்ளும் நபர்கள் சிறந்த பங்கு மாதிரிகளாக திகழ வேண்டும். இதனால் பாதிப்படைந்த குழந்தை, மாதிரி யைப் பார்த்து நன்கு கற்றுக் கொள்ளலாம். இக்குழந்தைகளுக்கு அதிகமான அளவு தூண்டுதல் தேவைப்படும். இக்குழந்தைகளுக்கு அதிகமான வாய்ப்புகள் மற்றும் ஊக்குவிப்பு தேவைப்படும், அப்போது தான் இக்குழந்தைகள் நன்கு கற்று செயல்படலாம்.

கற்பதன் பரப்பளவு என்பது திரும்பத் திரும்ப செய்வதனாலும், திறன்/பாடம்/மேற்கொண்ட வேலையை, தலைமை வகித்து, முயற்சித்து நிறைவாக செய்து முடிப்பதையும் பொறுத்து உள்ளது.

'மாறுபட்ட திறமையுடன் கூடிய குழந்தைக்கு அதிக அளவில் பொறுமை மற்றும் குடும்ப நபர்கள், ஆசிரியர்கள், நண்பர்களின் ஊக்கப்படுத்துதலும் தேவைப்படுகிறது.

சிறப்பான பயிற்சி / சிகிச்சைகளுடன், கற்பதற்கு உதவும் சிறப்பான கருவிகள் மற்றும் நுட்பங்கள், கற்பதை மேம்படுத்தி உயர்த்துபவை. உங்களால் ஒரு சில கருவிகளின் நுட்பங்களின் பெயர்களைக் கூற முடியுமா? பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பான உபகரணங்கள் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்ட உபகரணங்கள், பாதிக்கப்பட்ட குழந்தைகளை கட்டுப்படுத்துகின்றவற்றை முறியடித்து இயங்கச் செய்யும். உபகரணங்கள் ஆவன: மூக்குக் கண்ணாடிகள், பிரெயில் புத்தகங்கள், செயற்கை உறுப்புகள் மற்றும் கேட்கும் சாதனம் முதலானவை.

ஒத்த வயதை சேர்ந்தவர்களோடு செயல் எதிர்செயல் மிகவும் முக்கியமானது. குழந்தையின் ஊனம் ஒத்த வயதினரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது மிகுதியான முக்கியத்துவம் வாய்ந்தது. மாறுபட்ட திறனுடைய குழந்தை முதன்மை நிலையில் உள்ள குழந்தைகளின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருந்தாலும் சிறப்பான குழந்தைக்கு வியக்கத்தகும் வகையில் ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஒத்த வயதைச் சார்ந்த குழுவினரின் ஒரு பகுதியாக செயல்பட்டாலும் ஊனமுற்ற குழந்தைக்கு தனித்துவம் அளிக்கப்படுகிறது.

சமூகத்தால் பாதிப்படைந்த குழந்தைகளுக்கு மற்ற சிறப்புத் தன்மை வாய்ந்த குழந்தைகளைப் போல உதவிகள் தேவைப்படுகின்றன. அரசு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் அருட்பண்பு (Philanthropist) குழந்தைகளுக்கு வாழ்வதற்கான அடிப்படை தேவைகளை அளித்து உதவிட வேண்டும்.

அக்குழந்தைக்கு அவசரமான, அதிக தேவையான கலந்தாய்வு மற்றும் உள் இயல்பு சார்ந்த வழிகாட்டுதல் சிறப்பான வகையில் பயிற்சி பெற்றவர்கள் மூலமாக கொடுக்கப்படுகின்றன. அக்குழந்தைகளுக்கு தொடர்ந்து கண்காணிப்பு அவர்களது நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காக தேவைப்படுகிறது. குழந்தையை சரியான பாதையில் நடத்திச் செல்வதற்கு அதிக நேரமும், முயற்சியும் தேவைப்படும்.

சமூகத்தால் பாதிப்படைந்த குழந்தைகளுக்கு கல்வி, தொழில் திறன்கள் மற்றும் நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி சமூகத்தில் மறுசீரமைப்புடன் சிறப்பான கவனமும் தேவைப்படுகிறது.

இறுதியாக, குழந்தைகள் தங்களையே சார்ந்து இருப்பதற்கும் மகிழ்ச்சியாக உடல் சார்ந்த மற்றும் மன வெழுச்சிகளில் உறுதியுடன் இருக்கவும், குடும்பம் மற்றும் சமூகம் பெருமை கொள்ள எடுக்கப்பட்ட எந்த முயற்சியையும் கைவிடக்கூடாது.

# உடலைப் பாதுகாக்க சில இயற்கை மருத்துவக் குறிப்புக்கள்

## வயிற்றில் உள்ள அமில சுரப்பிகுறைய

வயிற்றுபகுதிகளில்அமில சுரப்பிகுறைவதற்கு உணவருந்திய பிறகுதினமும்தண்ணீரில் சிறிதளவு கருப்பட்டியினை கரைத்து குடித்து வரவும். இதனால் அமில சுரப்பி வருவதை தடுக்கலாம்.

## தொண்டை புண் முற்றிலும்குணமாக



சிலருக்கு கார உணவுகளைஅதிகம் சாப்பிடுவதால் தொண்டையில் புண்ஏற்படும். அந்த தொண்டை புண் விரைவில் குணமாக துளசி இலைகள் போடப்பட்ட நீரை தினமும் குடித்து வந்தால் தொண்டையில் ஏற்பட்ட புண்கள் முற்றிலுமாக நீங்கிவிடும்.

## உடல் பருமன் குறைய

சிலர் உடல் எடைஅதிகமாக இருப்பதால் உடலை நினைத்து மிகவும் வருந்துவார்கள். இந்த நிலையை போக்குவதற்கு கருமிளகுதூள்1/4தேக்கரண்டி, எலுமிச்சைசாறு3 தேக்கரண்டி, தேன்1 தேக்கரண்டி மூன்றையும் நீரில் நன்றாக கலந்து உடல் எடை அதிகம் உள்ளவர்கள் 3–4 மாதம் வரை தொடர்ச்சியாக குடித்துவர விரைவில் உடல் எடை மாற்றம் அடையும்.

இதுமட்டும் இல்லாமல் 3–4 மாதங்கள் வரை காலை உணவிற்குமுன்புதினமும்1 தக்காளிசாப்பிட்டுவர உடல்எடையானது குறைவதை நீங்களே அறியலாம்.

அடுத்து உடல் எடையினை குறைப்பதற்கு முழுமையாக வளர்ந்த கருவேப்பிலை இலையினை 10 முதல்12 இலைகளைசாப்பிட்டுவர 3அல்லது நான்கே மாதங்களில் உடல் எடை முற்றிலுமாக மெலிவடைந்துவிடும்.

## உடல் ஆரோக்கியமாக இருக்க

உடலை எப்போதும் ஆரோக்கியத்துடன் வைத்து கொள்வதற்கு அரிசிவகையானஉணவுகள், உருளை கிழங்கு போன்றவைகளை தவிர்த்துக் கொள்வது நல்லது.

இதனால் உடலில் சிலருக்கு வாய்வு தொந்தரவுகள் கூட ஏற்பட வாய்ப்புள்ளது. இதற்குமாறாக தினமும் கோதுமை சார்ந்த உணவுகளை எடுத்துக் கொள்ளலாம்.

## இருமல் தொல்லையிலிருந்து விடுபட

குளிர் நேரங்களில் மற்றும் சாதாரண நிலையில் சிலருக்கு வறட்டு இருமல்பிரச்சனை விடாது இருந்து கொண்டே இருக்கும். அது போன்று உள்ளவர்கள் 3 கப் அளவு நீரில் வெற்றிலையும், மிளகையும் நன்றாக கொதிக்க வைத்து குடித்து வர விடாமல் இருந்த இருமல் நோய் குணமாகும்.



காலைக்கதிர் Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## எதுவரை அளக்கலாம்?



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 193**

தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியவை பல உண்டு எனக் கூறி சிலவற்றை நேற்றுப் பதிந்திருந்தேன்.

நேற்றுக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பூர்வாங்கமாக பின்வரும் மூன்று விடயங்களைக் கோரத் தீர்மானிக்கப்பட்டது என்ற செய்திகள் வெளியாகின:-

1. நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு, அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

2. அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி மாகாண சபை தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்ட வேண்டும்.

3. உள்ளக சுயநிர்ணய அடிப்படையில்



டி.எஸ்.சேனநாயக்கா

தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த வட,கிழக்குப் பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புது அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த ஒழுங்குமுறை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதை நாம் வரவேற்கிறோம் எனக் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கோரிக்கைகளில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடன் புதிய அரசமைப்பைக் கேட்டால்தான் குறைந்த அதிகாரப் பகிர்வையாவது தர நினைப்பார்கள் என்ற எண்ணங்கள் இழையோடலாம்.

பேராண்மையின் கையில் இருக்கும் நிகழ்கால யதார்த்தங்களை அறிந்தும், புரியாமல், பொருளாதார மீட்சி என்ற ஒரே காரணத்திற்காக, அந்தப் பேராண்மை இவர்கள் கேட்பதை தாம்பாளத்தில் வைத்துத் தருவார்கள் என எண்ணுகிறார்கள். அப்படி இல்லாவிட்டால் சர்வதேசம் அவர்களைச் சும்மா விடாது என்று மக்களை நம்ப வைத்து, தங்களது நிகழ்காலங்களை ஓட்டுகிறார்கள்.


விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக ஏற்று, சர்வதேசத்திற்குக் கூட அவர்களுடன் சமஷ்டி நோக்கிய தீர்வுக்குப் போவோம் என உறுதி அளித்தவர்களில் ஒரு பங்காளி இன்றைய ஜனாதிபதி ரணில்.

தமிழ் மக்களுக்காகத்தான் அந்தத் தீர்வை நோக்கிப் பயணிக்க ஏற்றுக் கொண்டோம் என்பதை மனச்சுத்தியுடன் அதில் ஈடுபட்ட எந்தத் தலைவரும் இன்று வரை ஏற்றுக் கொள்ளத் தயார் இல்லை. தற்போது அவர்கள் இவை விடுதலைப் புலிகளோடு ஏற்றுக் கொண்டவை, அவர்கள் இல்லாதமையால் அதைப்பற்றிப் பேச வேண்டியதில்லை என மனம் கோணாமல், நாக்குக் கூசாமல் கூறுகிறார்கள். அவ்வளவு தராதரம் கொண்டிருக்கக் கூடிய தலைவர்களிடம் நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு, அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கையை வைத்தால் அதில் அவர்கள் இணக்கம் காட்டி அதனை நடைமுறைப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கிறார்களா?

டி.எஸ்.சேனநாயக்கா காலத்தில் இருந்தே இன விகிதாசாரத்தை கணக்கெடுத்து, அதிகார முறையிலும் அதிகாரமற்ற வகையிலும் 1956 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் பிரதேசங்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு தமிழ் தலைவரும் தேவையானவரை பேசி விட்டார்கள். ஆனதென்ன? இன்று தொல்லியல், வனவிலங்குப் பாதுகாப்பு என்ற திணைக்களங்கள் அவற்றைத் தொடர்ந்து சூறையாடும் போது, படைத்தரப்புகளின் உறவினர்கள், அவர்களது பாதுகாப்பில் குடியேற்றப்படுகிறார்கள். அது மட்டும் அல்லாமல், சரித்திர காலம் முதல் இருந்து வந்த மாவட்டங்களை மாற்றி அமைத்து, சில மாவட்டங்கள் சிங்கள பெரும்பான்மையாக்கப்படுகின்றன.

பேச்சு தொடங்கியதும், அன்றில் பேச்சுக்களில் இணங்கியவுடன், இவையெல்லாம் நிற்பாட்டப்படும் என மக்களை கனவுலகுக்கு அழைத்துச் செல்வது எவ்வளவு நாடகங்கள்?

ஒரு நம்பிக்கையில் வட,கிழக்கு இணைந்த மாகாணங்களாக இந்தப் பேச்சு வார்த்தைகளால் உருவாகிறது என வைத்துக் கொண்டாலும், இன்றைய யதார்த்த நிலையில் வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை,சம்பூர், அம்பாறை, பொத்துவில், மட்டக்களப்பு, மன்னார் போன்ற பகுதிகளின் இனவிகிதாசாரம் எந்த நிலையில் இருக்கின்றது? அந்த இன விகிதாசாரத்துடன் ஏற்படுத்தப்படும் இணைப்பின் கீழ் அந்தப் பகுதிகளில் தமிழ் மக்கள் தங்களது பாரம்பரியமான வாழ்வியல்புகளுக்கான தீர்மானங்களை மேற்கொள்ள முடியுமா? தற்சமயம் இருக்கின்ற இன விகிதாசாரக் கணக்குகளின்படி வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழ் மக்களது தேசிய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களே இந்தப் பகுதிகளில் இருந்து இல்லாமல்



ஜே.ஆர்.

போகலாம்.

இதேபோன்று முன்னைய ஜனாதிபதி சந்திரிக்காவின் 'பிராந்தியங்களின் இணைந்த அமைப்பை' பரிசீலிக்கலாம் எனப் பேச்சு சுகத்திற்காக சித்தார்த்தன் கூறுகிறார். பானையில் இருக்கும் சோற்றில் இருந்துதானே இப்படியான பிராந்திங்களும் அமைக்கப்படும்?

ஆக, இப்படி இனவிதாசாரத்தை மாற்றுவதற்கென்ற நோக்குடன் அரசாங்கங்களால் காலங்காலமாகக் குடியேற்றப்பட்டவர்களை மீள பெற்று, குடியேற்றி, தமிழ் மக்களின் பெரும்பான்மைகளை அந்தப் பிரதேசங்களில் நிறுவ இப்படியான இணக்கப் பேச்சுகளால் ரணில் வழி வகுப்பாரா? அது எவ்வளவு பாதிப்பை தேர்தல் காலங்களில் வாக்குச்சாவடிகளில் அவருக்கு ஏற்படுத்தும்? இந்த நிலைகள் எல்லாம் இவற்றில் பரிச்சயம் வாய்ந்த கட்டமைப்புக்களுடன் கலந்துரையாடாது, வடக்கு – கிழக்கு இணைப்பு, அதியுயர் அதிகாரப் பரவல், குடியேற்றங்களும் காணி அபகரிப்புகளும் நிறுத்தப்பட வேண்டும் என்ற வார்த்தைஜாலங்கள் அமைந்த கோரிக்கைகள் கேட்க நன்றாக இருக்கும். யதார்த்தங்களில் எதனைப் பெற்றுத் தரும் என்பவற்றையும் கணக்கெடுக்க வேண்டும்.

அதிகாரப்பதிவு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி, மாகாண சபை தேர்தலை உடன் நடத்த



சந்திரிகா

வேண்டும் என வைக்கப்படும் கோரிக்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட 13 ஆம் திருத்த சட்டத்தைத்தான் முதன்மையாக - ஆனால் வேறு வார்த்தைகளில் - தெரிவிக்கிறது என நினைக்கிறேன்.

புத்தி சாதுரியங்களும் சாணக்கியமும் 'கைகளில் இருப்பதை காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்' என அறிவுறுத்துகின்றன.

மாகாண சபைகளின் அதிகாரங்கள் அந்தச் சபையின் அங்கத்தினர்களின் கைகளுக்கு வரத் தேவையான மாற்றங்களை நாடாளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையால் ஆக்கிக் கொள்ள முடியும். மஹிந்த தரப்பினரதும், சஜித் பிரேமதாஸா தரப்பினரதும் ஆதரவுடன் தற்பொழுது உடனடியாக ஜனாதிபதி இவற்றை நிறைவேற்றலாம். மாகாண சபை சட்டமூலங்கள் 1988 இல் வந்ததிலிருந்து அதனை மேன்மைப்படுத்தவோ, மாற்றங்கள் ஏற்படுத்தவோ ஆராய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மங்களமுனசிங்கவின் 1990 ஆம் ஆண்டு அறிக்கைகளில் இருந்து, நல்லாட்சி காலத்தில் அமைந்த அரசமைப்பு நகல் வரை, இதன் அடிப்படையில்தான் அதிகார பரவலை அணுகின.

மாகாண சபை சட்டங்களில் ஆக்கத்தில் இந்திய ஒப்பந்தத்தின் நோக்கங்களை சீர்குலைக்கும் வகையில் ஜனாதிபதி ஜே. ஆர். அவரே அதிகாரத்தைப் பரவலாக்கிய அரசின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக அவரின் பிரதிநிதி ஒருவரை ஆளுநராக நிறுவி, பழையபடி அதிகாரங்களின் பெரும் பகுதிகளை தன்னிடமே வைத்துக் கொண்டார். மாகாண சபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்டு நிறுவப்பட்டு, அதிகாரத்தைப் பெற்று அமல்படுத்த வேண்டியவர்கள் அவர்களானாலும் அந்த அதிகாரங்கள் ஆளுநரின் வாய்க்காலில் இருந்து வரும் நீரிலேயே தங்கியிருந்தது.

இந்த முறைமையினை திருத்தி, அதனைப் பலமும் பயனுள்ள அதிகார பகிர்வாக, தமிழ் மக்களின் தன்னிறவுக்கு வழிவகித்திருக்கலாம். ஆனால் அதன் எதிர்த்து, எதிர்ப்புக்காக அதனை ஏற்காததும், இன்று வரை நிலைமைகள் புரையோடி, இன விகிதாசாரங்கள் பாரிய மாற்றங்கள் அடைந்து, நடந்தாலும் இணைப்பு பெயரளவினதாகவும், தமிழ் மக்களின் தனித்துவங்களைப் பிரதிபலிக்கவோ பாதுகாக்கப் போவதாக ஆக்கிக் கொள்ள இருக்கும் தமிழ் தலைமைகள் திராணியற்றவையாகவே இருக்கின்றன.

ஆதலால் நோர்வே என் சமாதான தரப்புகள் தமது ஆராய்வுகளில் கணித்தபடி, இணக்கங்களை அமல்படுத்தக்கூடிய உத்தரவாதங்களையும் ஆதரவுகளையும் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். பெருமைகளுக்காகப் பால் மாடுகள் வளர்ப்பதில் ஒன்றுமில்லை, அவை பால் சுரப்பவையாகவும் இருக்க வேண்டும்.

அந்த விதத்தில் ஜனாதிபதி காலம் கடத்துவதில் அதிசூரன். அவற்றை நாளை பார்ப்போம்.


(வளரும்...)

# 40 ஆம் ஆண்டில் திருச்சிலுவை சுகநல நிலையம்

அருட்சகோதரி கிளேயா சுவாமி தி.சி.
(திருச்சிலுவைக் கன்னியர் மடம், பரந்தன்)

**இலக்கம் 769, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் திருச்சிலுவைக் கன்னியர் சபையினரின் திருச்சிலுவை சுகநல நிலையம் பணியில் 40 ஆண்டுகளை 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொட்டு நிற்கிறது. நிலையத்தினருக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு றூபி ஆண்டு என்று அழைக்கப்படும் 40ஆவது ஆண்டு நிறைவில் இவர்கள் வெளியிட்ட சுகநலம் என்ற சஞ்சிகையில் இருந்து சில முக்கிய ஆக்கங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் வாசக அன்பு நெஞ்சங்களுக்குத் தருகிறோம்.**


ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை


வேதநாயகம் அ.ம.தி அடிகளார்


ஜே.பி.ஈ.செல்வராஜா அடிகளார்

'காலத்தின் தேவை இறைவனின் திட்டம்' என்ற திருச்சிலுவை கன்னியர் சபையின் விருது வாக்கிற்கேற்ப இலங்கையில் யாழ்ப்பாணம் திருச்சிலுவை கன்னியர் சபைக்கு ஒரு சுகநல நிலையம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற தீர்க்கதரிசனப் பார்வையுடனும், தூர நோக்குடனும் செயற்பட்டு அதற்கு வித்திட்டு மறைந்து போனவர்களை திருச்சிலுவை சுகநல நிலையத்தின் 40ஆம் ஆண்டு நிறைவில் நன்றியோடு நினைந்து அஞ்சலித்து இறைவனுக்கு நன்றி கூறுவது எமது தலையாய கடமையாகும் எனக்கருதுகிறேன்.

தமது கடின உழைப்பாலும், அர்ப்பணிப்புமிக்க பணியாலும் திருச்சிலுவை கன்னியர் சபைக்கு சுகநல நிலையம் ஒன்றை உருவாக்கப் பல ஆலோசனைகள் தந்தவர்கள் – அதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உதவியாளர்களைக் கண்டு பிடித்தவர்கள் – அந்த எண்ணக் கருவை நிஜமாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள் – கட்டடப்பணிகளை வேகமாக நகர்த்தியவர்கள் – இப்பணியில் எம்மைத் திடப்படுத்தி தட்டிக் கொடுத்து அருகில் நின்று செயலாற்றியவர்கள் என இன்று இவ்வுலகை விட்டு இறை உறவில் ஒன்றித்துள்ள எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்களுக்கு திருச்சிலுவை சுகநல நிலையம் சார்பாக அஞ்சலிகளை அர்ப்பணிக்க விரும்புகிறேன்.

### ஆயர் தியோகுப்பிள்ளை

இந்த வரிசையில் முதலில் அன்போடும் நன்றியோடும் நினைவு கூறப்பட வேண்டியவர் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மறைந்த மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையவர். அவரின் தாராள சிந்தையும் தூரநோக்குப் பார்வையுமே இந்த சுகநல நிலையத்தின் அடித்தளத்திற்கு காரணமாக அமைந்தது எனத்தெரிவிக்க விரும்புகிறேன்.

1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் மறைந்த மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை 144, கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது மடத்தில் எம்மைச் சந்தித்து, எம்மில் சிலரை சுகநல நிலையத்தின் ஆரம்ப கட்டடம் இன்று அமைந்து இருக்கின்ற பகுதிக்கு அழைத்துச் சென்றார். காடு பற்றிக்கிடந்த அந்தக் காணியை சுட்டிக் காட்டிய அவர் தமக்கே உரிய பாணியில் You may take this portion of the land for a Hospital என்று ஆங்கில மொழியில் சொன்ன அந்த வார்த்தைகள் இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளன. அன்பளிப்பாக அக்காணியைத் திருச்சிலுவைக் கன்னியர் சபைக்குத் தந்த ஆயர் தமது செயலாளராகப் பணியாற்றிய மறைந்த ஜே.பி.ஈ.செல்வராஜா அடிகளாரிடம் அனைத்து விடயங்களையும் கவனிக்கும்படி பணித்தார்.

### செல்வராஜா அடிகளார்

ஜே.பி.ஈ.செல்வராஜா அடிகளார் தமக்கே உரிய சுறுசுறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் மின்னல் வேகத்தில் செயற்பட்டு எம்மை ஊக்குவித்து அதற்குரிய ஆவணங்கள் அனைத்தையும் தயார் செய்து இறுதிவரை எமக்கு உறுதுணையாக இருந்தார் என்பதை நன்றியுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

### வேதநாயகம் அ.ம.தி அடிகளார்

மறைந்த வேதநாயகம் அ.ம.தி அடிகளார் திருச்சிலுவை சுகநல நிலையத்தின் படவரைஞராக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு சுகநல நிலையத்தின் கட்டடத்திற்கான வரைபடத்தை அழகுற வரைந்தார்.

### அருட்சகோதரிகள்

அப்போது திருச்சிலுவை கன்னியர் சபையின் இந்திய மாகாணத் தலைவியாகப் பணியாற்றிய கேரளாவைச் சேர்ந்த அருட்சகோதரி ஐடா முலாறிக்கல் இலங்கைத் திருச்சிலுவை கன்னியர் சேவைக்கென ஒரு சுகநலநிலையம் தேவை என்பதைக் காலத்தின் கட்டாயத் தேவையாக உணர்ந்து அருட்சகோதரி எட்முண்டாபவர் அவர்களை எம்மிடை அனுப்பி தேவையான ஆலோசனைகளையும் பண உதவியையும் பெறவழி செய்தார்.

அருட்சகோதரி எட்முன்டா பவர் அவர்கள் 1981ஆம் ஆண்டு இலங்கை வந்து 1982ஆம் ஆண்டில் மாகாண முதல்வராக நியமிக்கப்பட்டுப் பணியாற்றினார். பின்னர் தனது உடல் நிலை காரணமாக இந்தியா திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

அருட் சகோதரி ஐடா முலாறிக்கல் அத்தோடு நின்று விடாது கட்டட வேலையை மேற்பார்வை செய்ய அருட் சகோதரி இசபெல்இறாத்தப்பளில் அவர்களை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைத்தார். இந்த வகையில் இந்திய மாகாணத்திலிருந்து இலங்கை


அருட்சகோதரி எட்முண்டா பவர்


அருட்சகோதரி ஐடா முலாறிக்கல்


அருட்சகோதரி கெலன் எதிர்மன சிங்கி

வந்து வைத்திய பணிகளை மேற்கொண்ட இந்திய மாகாணத் திருச்சிலுவைக் கன்னியர் சபை எமக்கு ஒரு தாய் மடம்போல விளங்கியது. அவர்கள் எமது வளர்ச்சியில் நிறைவு கண்டார்கள். நாமும் அவர்களது உதவிப் பணியில் எமது ஒத்துழைப்பை வழங்கிப் பயணித்து வளர்ந்து வந்துள்ளோம். கன்னியர்களின் பற்றாக்குறை


அருட்சகோதரி புளோறினா பத்திநாதர்


அருட் சகோதரி ஜறீன் அல்வாயினஸ்


அருட் சகோதரி மரிய கொறற்றி பஸ்ரியாம்பிள்ளை

நிலவிய ஆரம்ப காலமான 1982ஆம் ஆண்டு நவம்பர் முதல் 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலவிதமான கஷ்டங்கள், சவால்கள் மத்தியில் இரவு பகல் பாராது ஊண் உறக்கம் இன்றி என்னோடு இணைந்து பணியாற்றிய அருட்சகோதரி புளோறினா பத்திநாதர் ஆற்றிய பணி பதியப்பட வேண்டிய பணியாகும்.


அருட்சகோதரி கிறிஸ்ரா ஆசீர்வாதம்


அருட்சகோதரி அஞ்சலினா யோசவ்


அருட்சகோதரி லவுறா சாமுவேல்

திருச்சிலுவைக் கன்னியர் சபையின் மூத்த அருட் சகோதரிகளான மாகாண முதல்வர் ஜறீன் அல்வாயினஸ் – மாகாண முதல்வர் மரியகொறற்றி பஸ்ரியாம்பிள்ளை மற்றும் அருட்சகோதரிகள் கெலன் எதிர்மன சிங்கி – ஆன் மேரி அன்ரனி – கிறிஸ்ரா ஆசீர்வாதம் ஆகியோர் நாட்டின் அன்றைய இக்கட்டான சூழ்நிலையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்து தம் வாழ்வாலும் பணியாலும் வைத்தியசாலைப் பணிகள் மேலும் சிறக்க என்னுடன் பயணித்துப் பணியாற்றியவர்கள். மேலும் திருச்சிலுவைக் கன்னியர் சபையின் அருட் சகோதரிகளான அஞ்சலினா யோசவ் – லவுறா சாமுவேல்


அருட்சகோதரி இசபெல் இறாத்தப்பளில்


அருட் சகோதரி டொறத்தி பிலிப்


அருட் சகோதரி தியடோசினா மிறண்டா


– டொறத்தி பிலிப் – அக்னஸ் யோசெப் – தியடோசினா மிறாண்டா ஆகியோர் திருச்சிலுவைக் கன்னியர் சபையின் குழுவாழ்விலும், சுகநலநிலைய உணவுச் சாலைப் பணியிலும் தமது ஆளுமையைப் பதித்தவர்கள்.

எம் எல்லோரையும் எப்போதும் அன்போடும் பாசத்தோடும் வரவேற்று ஒவ்வொருவரின் தேவைகளையும் கேட்டறிந்து, உடலாலும் உள்ளத்தாலும் பணியாற்றியவர்கள் மட்டுமல்ல எம் எல்லோரையும் ஆன்மீக ரீதியாகவும் உறங்கொடுத்து உறுதிப்படுத்தியவர்கள். திருச்சிலுவை சுகநலநிலையத்தின் பயணப்பாதையில் அர்ப்பணிப்போடு பணியாற்றி மறைந்துபோன உங்கள் அனைவரையும் திருச்சிலுவைக் சுகநல நிலையத்தின் 40ஆம் ஆண்டு நிறைவில் நன்றியோடு நினைந்து அஞ்சலிக்கிறோம்.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி

திருச்சிலுவைக் சுகநல நிலையத்தின் வரலாற்றில் உங்கள் பெயர் பொன் எழுத்துக்களால் என்றும் பொறிக் கப்பட்டிருக்கும் என உறுதி செய்கிறோம். உங்கள் அர்ப்பணிப்பான பணிவாழ்விற்காக இறைவன் தமது இன்ப சந்நிதானத்தில் நீங்கள் அமைதியில் இளைப்பாற உங்களுக்கு இடம் தந்துள்ளார் என உறுதியாக நம்புகிறோம். என்றும் அமைதியில் இளைப்பாறுங்கள் என திருச்சிலுவை சுகநல நிலையத்தின் பெயரால் அஞ்சலிகளை காணிக்கையாக்குகிறோம்.

எமது சுகநல நிலையமானது போர்க்காலங்களில் பல இந்து சமய, கத்தோலிக்க சமய மக்களின் இறுதி நேர மருத்துவ உதவிகளையும் இறுதிக் நேரக் கடமைகளையும் நிறைவேற்றிய தருணங்கள் என் மனதில் சோக நினைவுகளாய் உள்ளன. அவ்வாறு இறந்து போன இந்து மற்றும் கத்தோலிக்க சமய மக்கள் அனைவரும் அமைதியில் இளைப்பாறுவார்களாக என இறைவனை வேண்டி நிற்கிறேன்.


அருட்சகோதரி ஆன்மேரி அன்ரன்


அருட்சகோதரி அக்னெஸ் ஜோசப்

## ஆளுநரின் அரசமைப்பு ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணத்தில்தான் - அந்த சர்வாதிகாரிகளையும் மீறித் தனி நபர் நியதிச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தும் பேரவலம் ஏற்பட்டிருக்கின்றது" - என்று சிவஞானம் குறிப்பிட்டார்.

உத்தேச வழக்கு, வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்திலா அல்லது கொழும்பில்வேறு உயர்நிலை நீதிமன்றங்களிலா தாக்கல் செய்யப்படும் என்பது தெரியவில்லை.

எனினும் விரைவில் அந்த வழக்குத் தாக்கல் செய்யப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் உறுதி செய்தன.

## வாலுடன் பிறந்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்பும் குழந்தைகள் பிறந்துள்ளன.

ஆனால், அவற்றிற்கும் இந்தக் குழந்தைக்கும் என்ன வித்தியாசம் என்றால், இந்தக்குழந்தையின் உடலில் காணப்படுவது வெறும் ஒரு துண்டு சதை அல்ல. அது முழுமையாக, சதை, இணைப்புத் திசு மற்றும் நரம்புகளுடன் உண்மையான வாலாகவே வளர்ந்துள்ளதுதான் அதிசயம்.

அந்த வாலைக் கிள்ளினால் குழந்தை அழுகிறது. ஆக, அந்த வால் அந்தக் குழந்தையின் உடலின் ஒரு பாகமாகவே வளர்ந்துள்ளது.

உடனடியாக அந்த வாலை அகற்றினால் குழந்தைக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படலாம் எனக் கருதிய மருத்துவர்கள், அந்தக் குழந்தை பிறந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அந்த வால் 5.7 சென்றி மீற்றர் நீளம் வளர்ந்தபிறகு, அதை அறுவை சிகிச்சை மூலம் அகற்றியுள்ளார்கள்.

வால் அகற்றப்பட்ட பிறகு அந்தக் குழந்தை நன்றாக இருப்பதாகவும், அவளுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## அருகில் உள்ள துயிலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தங்கள் செயற்பாடுகளை இடைநிறுத்தி, நினைவேந்தலை எழுச்சி பூர்வமாக செய்ய வேண்டும். மாலை 6.05 மணி அளவில் தாயகத்தில் இருக்கக்கூடிய ஆலயங்களில் மணியொலியை எழுப்புவதற்கு ஆலய நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

கட்சி வேறுபாடுகளை தாண்டி அனைத்து மக்களும் தங்களது நினைவேந்தலை உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். நினைவேந்தல் நடைபெறுகின்ற துயிலும் இல்லங்களுக்கும் நினைவேந்தல் இடங்களுக்கும் குறித்த நேரத்தில் செல்ல முடியாத மக்கள் இல்லத்தில் இருந்தவாறு உறவுகளை நினைவேந்த வேண்டும்.

யாழ்ப்பாண நகரில் நல்லூர் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒழுங்கமைப்புகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அதே போன்று துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. - என்றார்.

## உடுத்துறையில்



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி கிழக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில்இடம்பெற்றஇந்நினைவேந்தலில் பொதுச் சுடரேற்றப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## சமஷ்டி எனக் கூறி .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறாக செயல்படும் தரப்புகளை மக்கள் விரட்டியடிக்க முன்வர வேண்டும்.

எந்தவொரு விதத்திலும் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளையோ தமிழ் தேசிய அங்கீகாரத்தையோ அல்லது தனித்துவமான இறைமையையோ வடகிழக்கில் சுயநிர்ணயத்தை அனுபவிக்க கூடிய சமஷ்டி தீர்வையோ வழங்குவதற்கு தயார் இல்லாத இடத்திலே அதனை ஏற்க முடியாது.

அடுத்த தேர்தலில், தமிழ்தேசிய கூட்டமைப்புக்கோ அல்லது விக்னேஸ்வரன் தரப்புக்கோ ஆசனங்கள் குறைவாக கிடைக்கும் என்று தெரிந்தபடியால் அதற்கிடையில் ஒற்றையாட்சியை தமிழ் மக்கள் விரும்பியிருக்கின்றார்கள் என்ற மாபெரும் துரோகத்தை அடுத்த தேர்தலுக்கு முன்பே செய்ய வேண்டும் என்ற சதித்திட்டத்தையும், நிறைவேற்றுவதற்குத் தான் அவர்கள் அவசரமாக இதை செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

சிலநாள்களுக்கு முன்னர் தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்ட மாவை சேனாதிராஜா என்னுடன் யாழ்ப்பாணத்தில் சந்தித்து பேச விருப்பம் தெரிவித்தாரே தவிர வேறு எந்த சந்திப்புக்கும் அழைப்பு விடுக்கவில்லை.

தேர்தலுக்குச் சென்றால் மீண்டும் ஆட்சி அமைக்க முடியாத நிலை ஏற்படும் என்பதால் தேர்தலுக்குப் போகாமல் தங்களுக்கு அங்கீகாரம் இருப்பதாக காட்டுவதற்கு முயற்சிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்காக மக்கள் ஆணையுள்ள தரப்புக்களுடன் கலந்துரையாடி அவர்களது ஆதரவு தனக்குள்ளது போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்க முயல்கிறார். - என்றார்.

## 29 கிலோ கஞ்சாவுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி கப்ரக வாகனத் தில் கஞ்சா ஏற்றி வருவதாக பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து முகமாலை பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது

## இன்று மாவீரர்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துயிலும் இல்லங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன. மாவீரர் நினைவுப் பாடல்கள் விண்ணதிர ஒலிக்கின்றன.

இன்று மாலை 6.05 மணிக்கு ஆலயங்களில் மணியோசை எழுப்பப்பட துயிலும் இல்லங்கள், வீடுகள், பொது இடங்களில் சம நேரத்தில் சுடர் ஏற்றப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 15 க்கும் மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த அனைவரையும் அணிதிரண்டு வருமாறும் அந்தந்தத் துயிலும் இல்லங்களின் பணிக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனார்.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 5 இடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடி முன்மாரி துயிலும் இல்லம், தாண்டியடி துயிலும் இல்லம், தரவை துயிலும் இல்லம், வாகரை கண்டலடி துயிலும் இல்லம் என நான்கு துயிலும் இல்லங்கள் உள்ளன.

இந்த நான்கு துயிலும் இல்லங்களில் தாண்டியடி துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் உள்ளதால் தாண்டியடி சந்தியில் உள்ள பிரத்தியேக இடத்திலும், ஏனைய மூன்று துயிலும் இல்லங்களில் அதே துயிலும் இல்லங்களிலும் வணக்க நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தாயக விடுதலைக்காகத் தங்களது இன்னுயிர்களை ஆகுதியாக்கிக் கொண்ட மாவீரர்களை நினைவுகூர்ந்து வருடந்தோறும் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இந்த வருடமும் மாவீரர் நாளுக்கான நினைவேந்தல் நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தமிழர் தாயகத்தில் அரச படைகளின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் இடம்பெற்றுள்ளன.

உறவுகளின் போக்குவரத்து வசதி கருதி போக்குவரத்து வசதிகளும் மாவீரர் துயிலும் இல்லங்களின் பணிக்குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் நிகழ்வு இன்று புலம்பெயர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.






- ரவிசங்கர் -

# மனிதாபிமான நடவடிக்கைகள் உட்பட நெருக்கடியான தருணங்களில் இந்தியாவின் உதவியை மறக்கமுடியாது!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நினைவுகூர்ந்தார்

மனிதாபிமான நடவடிக்கை உட்பட மிக நெருக்கடியான தருணங்களில் இந்தியா வழங்கிய உதவிகளை இலங்கை ஒருபோதும் மறக்காது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்கும் இலங்கை பாதுகாப்பு படையினருக்கும் இடையிலான 50 வருட இணைப்பைக் குறிக்கும் வகையில் இலங்கைக்கான இந்திய தூதரகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பின் அனைத்து பரிமாணங்களிலும் இந்தியா இலங்கையின் மிக முக்கிய பங்காளிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ள அவர் இரு நாடுகளுக்கும் இடையிலான சுமுகமான உறவின் வாய்ப்புகளை இது கோடிட்டு காட்டுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இது பாதுகாப்பு பொருளாதாரம் கலாசாரம் வர்த்தகம் ஆகியவற்றில் இலங்கையின் நிலையை வலுப்படுத்த உதவுகின்றது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வரலாறு முழுவதும் இரு நாடுகளும் பாதுகாப்பு உறவுகளைப் பேணியுள்ளன. உயர்மட்டத்தில் இருந்து உருவாகும் தொடர்ச்சியான தொடர்புகள் மூலம் ஒருவருக்கொருவர் உதவ உறுதிபூண்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான நடவடிக்கைகளின் போது இந்தியா வழங்கிய ஆதரவை நினைவுகூர்ந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இந்த உறவு எதிர்காலத்திலும் தொடரும் என எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இந்தியாவின் அயல் நாட்டுக்கு முதலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் இலங்கையின் திறன் மேம்பாட்டு முயற்சிகளுக்கு உதவுவது தொடர்பாக இந்தியா உறுதி பூண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.



ஆயுதப்படையினருக்கு இடையிலான பயிற்சி நடவடிக்கைகள் சகோதரத்துவம் மற்றும் ஒருவருக்கொருவர் இணைந்து இயங்கக் கூடிய தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ள உயர்ஸ்தானிகர் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கல்லூரியில் கற்ற இலங்கையர்கள் பலர் இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பில் மிக உயர்ந்த நிலைக்கு சென்றுள்ளனர். இது இருநாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகளை வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு இராஜதந்திரம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டியுள்ள கோபால் பாக்லே, நாங்கள் உறவுகளை உருவாக்குபவர்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான பாலங்களை கட்டியெழுப்புபவர்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் எரிபொருள்கள் கப்பல்களுக்கான தாமதக்கட்டணம் திட்டமிட்ட வியாபாரமா?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி




ஊழல் மோசடிகளுக்கு எதிராக நாட்டு மக்கள் அரசாங்கத்துக்குக் கடந்த காலத்தில் படிப்பினை வழங்கினாலும் அரசாங்கம் இன்னும் திருந்தவில்லை. அதனால்தான் பஸில் ராஜபக்ஷவை வரவேற்பதற்கு விமான நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்த தேநீர் உபசரிப்புக்கான செலவை சிவில் விமான சேவை திணைக்களம் வழங்கி இருக்கின்றது. அத்துடன் ஊழலை ஒழிப்பதற்கு ஜனாதிபதியும் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மற்றும் நீர்வழங்கல் அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

இந்த அரசாங்கத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளுக்கு எதிராக மக்கள் வீதிக்கிறங்கி போராட்டம் மேற்கொண்டனர். அதன் விளைவாக அரசியல் மாற்றம் ஏற்பட்டது. என்றாலும் இன்னும் இந்த அரசாங்கத்தில் இருப்பவர்கள் மக்களிடம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் கடந்த வாரம் பஸில் ராஜபக்ஷ வெளிநாட்டில் இருந்து வரும்போது அவரை வரவேற்பதற்கு அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் உட்பட பலர் சென்றிருந்தனர். அங்கு சென்றவர்களுக்காக தேநீர் உபசரிப்பு ஒன்றும் இடம்பெற்றது.

ஆனால் தேநீர் உபசரிப்புக்கான கட்டணமாக 65 ஆயிரம் ரூபா செலவை சிவில் விமான சேவை திணைக்களமே செலுத்தி இருப்பதாக பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிட்டிருக்கின்றது. அதனால் மோசடிகள் தொடர்பில் இவர்கள் இன்னும் திருந்தவில்லை.

அத்துடன் ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வந்து பல்வேறு விடயங்களை குறிப்பிடுகிறார். ஆனால் ஊழல் மோசடிகளை ஒழிப்பது தொடர்பாக எதுவும் தெரிவிப்பதில்லை. ஜனாதிபதி ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதனால்தான் பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்துகொண்டார்கள்.

மேலும் எரிபொருள் கப்பல்களுக்கு தாமதக்கட்டணம் செலுத்தும் நடவடிக்கையை காண்கின்றோம். இவ்வாறு தாமதக் கட்டணம் செலுத்துவதால், அதனுடன் தொடர்புபட்டவர்களுக்கு நூற்றுக்கு 40,50 வீதம் பிரிந்துசெல்வதாக இந்த அரசாங்கத்தில் இருந்த அமைச்சர் ஒருவர் ஊடகங்களில் பாரிய குற்றச்சாட்டு ஒன்றை தெரிவித்திருந்தார்.

இறுதியாக நாட்டுக்கு வந்த எரிபொருள் கப்பல் 65 நாள்கள் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்காக தாமதக் கட்டணமாக 82 லட்சத்து 50ஆயிரம் டொலர்மில்லியன் செலுத்தி இருக்கின்றது.

எரிபொருள் கொள்வனவு செய்ய டொலர் இல்லாமல், எரிபொருள் கப்பலுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. கப்பல் துறைமுகத்துக்கு வந்த பின்னரே அதற்குத் தேவையான டொலரை தேடுகின்றனர். அதனால்தான் தாமதக்கட்டணம் செலுத்தவேண்டி ஏற்படுகின்றது.

எரிபொருளுக்கு டொலர் இல்லை என்றால், அதனை திறைசேரியிடம் கோரி டொலர்களை தேடிக்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் எவ்வாறு எரிபொருள் கப்பலைக் கொண்டுவர முடியும். அதனால் இது திட்டமிட்ட வியாபாரமா என்ற சந்தேகம் எழுகின்றது . – என்றார்.

# வடமாகாண குடிதண்ணீர் திட்டத்தில் பாரபட்சம்; சுகாதார அமைச்சர் கெஹலியவின் விளக்கம்



சுத்தமான குடிதண்ணீர் பெற்றுக் கொள்வது மக்களின் அடிப்படை உரிமை என்று கருதுகிறேன். வடக்கு மாகாணத்துக்கான குடிதண்ணீர் திட்டத்தில் பாரபட்சம் காட்டப்படுகிறது எனக் குறிப்பிடுவதை முழுமையாகப் புறக்கணிக்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சின் பின்னரே கறும்புள்ளியான் குடிதண்ணீர் அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் அறிவிக்கப்படும் என சுகாதாரத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூட்டமைப்பின் உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலக வங்கியின் ‘சுத்தமான குடிதண்ணீர் மற்றும் சுகாதார மேம்பாட்டு’ கருத்திட்டத்தின் கீழ் கறும்புள்ளியான் குடிதண்ணீர் செயற்திட்டப் பணிகள் எப்போது மீள ஆரம்பிக்கப்படும் என்பதை சுகாதாரத்துறை அமைச்சர் இப்போது குறிப்பிட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சுகாதாரத்துறை அமைச்சரிடம் கேள்வியெழுப்பினார்.

இதன்போது எழுந்து பதிலளித்த சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அரசியல் மற்றும் சமூக பாதுகாப்பு எந்தளவான மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை நன்கு அறிவீர்கள், புதிதாக குறிப்பிட வேண்டிய அவசியம் கிடையாது.

பொருளாதார பாதிப்பால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார பாதிப்பால் ஒருசில அபிவிருத்தி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதற்கமையவே இந்த அபிவிருத்தி பணிகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கறும்புள்ளியான் குடிதண்ணீர் அபிவிருத்தி திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும் என தற்போது குறிப்பிட முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு நிறைவு பெற்றதன் பின்னரே அது தொடர்பான தீர்மானத்தை எடுக்க முடியும்.

சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வது மக்களின் அடிப்படை உரிமையாகும். குடிதண்ணீர் விடயத்தில் இன, மத பாரபட்சம் பார்க்க முடியாது எனத் தெரிவித்தார்.

# வடமாகாணத்தில் 551 பேர் 9 ‘ஏ’ தர சித்தி பெற்றுசாதனை!

## யாழ்.கல்வி வலயம் முதலிடம்

2021ஆம் ஆண்டின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 551 மாணவர் கள் 9 பாடங்களிலும் ‘ஏ’ தர சித்தியை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இருந்து 16 ஆயிரத்து 564 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையிலேயே 551 மாணவர்கள் 9 பாடங்களிலும் ‘ஏ’ தரத்தில் சித்தியை பெற்றுள்ளனர்.



இதில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 3 ஆயிரத்து 9 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 193 மாணவர்கள் 9 பாடங்களிலும் ‘ஏ’ தரத்தில் சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2022இல் வெளியிடப்பெற்றது.